தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.06.2013 A.M**

---

## காவிரி நீர்ப்பிடிப்புப்பகுதிகளில் கனமழை: கிருஷ்ணராஜசாகர், கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

காவிரி நீர்ப்பிடிப்புப்பகுதிகளில் கனமழை பெய்துவருவதால், கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி, ஹாரங்கி அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

காவிரி நதியில் தண்ணீர் வற்றியதால், தமிழகத்திற்குதண்ணீர் தருவதில் சிக்கல் ஏற்பட்டதோடு, பெங்களூர், மைசூர் உள்ளிட்ட பகுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு உருவானது. இதனால் காவிரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இதுவிவசாயிகள், பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், வடகேரளம், தென்கர்நாடகம், கடலோரகர்நாடகத்தில் தென்மேற்குபருவமழை பெய்ய தொடங்கியுள்ளது. குறிப்பாக, காவிரி நீர்ப்பிடிப்புப்பகுதிகளில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்துவருகிறது. இதன்விளைவாக, கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இது விவசாயிகள், பொதுமக்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்வரத்து விநாடிக்கு 5837 கன அடியாகவும், கபினி அணையில் நீர்வரத்து விநாடிக்கு 12 ஆயிரம் கன அடியாகவும் இருந்தது. இதனால் கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் 66.85 அடியாகவும், கபினியின் நீர்மட்டம் 2257.87 அடியாகவும் உயர்ந்துள்ளது. அதேபோல, ஹேமாவதி அணையில் நீர்வரத்து விநாடிக்கு 4900 கன அடியாகவும், ஹாரங்கி அணையில் நீர்வரத்து விநாடிக்கு 2501 கன அடியாகவும் இருந்தது. இதனால் ஹேமாவதி அணையின் நீர்மட்டம் 2861.40 அடியாகவும், ஹாரங்கிஅணையின் நீர்மட்டம் 2813.76 அடியாக உயர்ந்துள்ளது. கேரளமாநிலத்தில் கனமழை பெய்துவருவதால் கபினியில் நீர்வரத்து பெருகியுள்ளது. இதே நிலை நீடித்தால், ஜூலை மாத இறுதிக்குள் கபினி அணை முழுமையாக நிரம்பும் என்று

எதிர்ப்பார்க்கப்படுகிறது. அடுத்த ஒருவாரத்தில் தொடர்ந்து கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. இதனால் காவிரி நீர்ப்பிடிப்புப்பகுதிகளில் கனமழை பெய்யும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## அமராவதி அணை திறப்பு

அமராவதி அணை ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது.

உடுமலையை அடுத்த அமராவதி அணையின் மொத்த உயரம் 90 அடி. திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள் இந்த அணையை நம்பியே உள்ளன. மேலும், நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் விளங்கி வருகிறது.

இந்நிலையில் சின்னாறு, தேனாறு, பாம்பாறு உள்ளிட்ட அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளில் சில நாள்களாக பெய்துவரும் பருவ மழையால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை காலை அணைக்கு 2036 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதைத் தொடர்ந்து மாலை 6 மணி அளவில் அணையின் நீர்மட்டம் 40 அடியை தாண்டியது.

பொதுப்பணித் துறையினர் கூறியது: கரையோர கிராம மக்களின் குடிநீர் தேவைகளுக்காக அணை திறந்துவிடப்பட்டுள்ளது.

## வேளாண்மைக் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் தேர்வு

செங்குன்றத்தில் உள்ள சைதாப்பேட்டை தாலுக்கா தொடக்க வேளாண்மை உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்க நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். செங்குன்றம், புழல், மாதவரம், பாடியநல்லூர், சூரப்பட்டு, மாதவரம், காட்டூர், வெள்ளானூர் சுற்றுப் பகுதிகளில் உள்ள 66 நியாய விலைக்கடைகள் இச்சங்கத்தின் கீழ் இயங்கி வருகிறது.

இதன் புதிய நிர்வாகிகள் தேர்வு சமீபத்தில் நடந்தது. சங்கத் தலைவராக டாக்டர் ஆர்.செப்ந்தர்ராஜன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், துணைத் தலைவராக நதியா ஜெய்சங்கர்,இயக்குனர்களாக ஜி.கே.எழில், முனுசாமி, மாணிக்கம், எஸ்.எம்.ரமேஷ், அமுதா, விமலா, காஞ்சனமாலா, சத்தியநாராயணன், சுரேஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் தேர்தல் அதிகாரி வெங்கட்ராமன் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.

**நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி விளைச்சலை அதிகரிக்க அறிவுறுத்தல்**

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, விளைச்சலை அதிகரிக்க வேண்டுமென்று பேராசிரியர் டி.ஜெயராமன் பேசினார்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது மாநாடு கடலூர் மாவட்டத்தில் நடைபெறுவதையொட்டி அதன் விளக்கக் கருத்தரங்கம், புதுச்சேரி அடுத்த பாகூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ்.பத்மநாபன் தலைமை வகித்தார். பிரதேச செயலர் வி.சங்கர் முன்னிலை வகித்தார். மும்பை பல்கலைக்கழக பேராசிரியர் டி.ஜெயராமன், பருவநிலை மாற்றம் குறித்துப் பேசியது:

நம் நாட்டில் 60 சதவீத மக்களுக்குக் கூட மின்சாரம் கிடைப்பதில்லை. ஆனால் அமெரிக்காவில் ஓர் ஆண்டுக்கு நம் நாட்டில் பயன்படுத்தப்படுவதை விட 20 மடங்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. மின்சாரம் உற்பத்திக்கு எரிபொருள் தேவைப்படுகிறது. எரிபொருளால் உலகம் இன்றைக்கு வெப்பமயமாகி வரும் நிலையும் உள்ளது.

இதுவரை எரிபொருள்களால் பூமியில் ஏற்பட்டுள்ள வெப்பம் 0.8 டிகிரியாக உள்ளது. இது 6 டிகிரியாக உயர்ந்தால் பூமியில் எந்த உயிரினமும், தாவரங்களும் வாழ முடியாது. அனைத்தும் அழிந்து போகும் நிலை ஏற்படும்.

தற்போது வெப்பமயம் 1 டிகிரியாக உயர்ந்து பருவநிலை மாற்றம் ஏற்பட்டால், பல மில்லியன் ஹெக்டேர் விளைச்சல் பாதிக்கப்படக்கூடும். அதற்காக வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் மீது கட்டுப்பாடுகள் விதிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பருவநிலை மாற்றம் ஏற்படுவதற்கு இன்னும் பல ஆண்டுகள் உள்ளன. எனினும் விவசாயத்திற்கு மிகவும் தேவையான தண்ணீரை அதிகம் செலவு செய்யாமல் குறைவாகப் பயன்படுத்தி விளைச்சலை அதிகப்படுத்த வேண்டும். அறிவியல் பூர்வமான விவசாய வளர்ச்சிக்கு நம்மை உட்படுத்திக் கொண்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் டி.ரவிந்திரன், நிலமும், பயிரும் என்ற தலைப்பில் பேசினார். ஏரி புனரமைப்பு சங்க நிர்வாகி ஜி.ராமசாமி,

நிர்வாகிகள் முத்துலிங்கம், சிவப்பிரகாசம், ராமமூர்த்தி, முத்துக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### சொட்டுநீர் பாசனம்: விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம்

விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும் என தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் த.சந்திரசேகரன் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் சொட்டுநீர்ப் பாசனம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில், விவசாயிகளின் கேள்விகளுக்கு தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் த. சந்திரசேகரன் பதில் அளித்தார். அப்போது அவர் தெரிவித்தது:

திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 73,723 ஹெக்டேர் பரப்பளவில், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. வறட்சியின் காரணமாக தற்போது தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்வதற்கு, சொட்டுநீர் பாசன முறையை செயல்படுத்த முன்வர வேண்டும்.

சிறு, குறு மற்றும் பெரு விவசாயிகள் சொட்டுநீர் பாசனத்தை செயல்படுத்துவதற்கு, தமிழக அரசின் சார்பில் முழு மானியம் வழங்கப்படுகிறது. குறு விவசாயிகளுக்கு 2.5 ஏக்கர் வரையிலும், சிறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரையிலும் இத்திட்டத்தின் மூலம் முழு மானியம் வழங்கப்படும்.

அதேபோல, இத்திட்டத்தின் கீழ் சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு, பெரு விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. பயிர்களின் இடைவெளிக்கு ஏற்பவும் இத்திட்டத்தில் வழங்கப்படும் மானியத் தொகை மாறுபடும். அதாவது இடைவெளி குறைந்த காய்கறி பயிர்களுக்கு அதிகமாக மானியம் கிடைக்கும். அதிக இடைவெளியில் பயிரிடப்படும் மா, வாழை, கொய்யா உள்ளிட்ட பயிர்களுக்கு இடைவெளிக்கு ஏற்றவாறு மானியம் வழங்கப்படும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கு 15 நிறுவனங்களுக்கு, தமிழக அரசு அங்கீகாரம் வழங்கி உள்ளது. இந்த நிறுவனங்களை விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்ப தேர்வு செய்து கொள்ளலாம். 75 சதவீத மானியத்தில் சொட்டுநீர்

பாசனம் அமைக்கும் விவசாயிகள், மீதம் உள்ள 25 சதவீத தொகையை வங்கி வரைவோலையாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

அதிகபட்சமாக ஒரு விவசாயி 12.5 ஏக்கர் வரை, இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். மேலும், இத்திட்டத்தின் மூலம் பயிர்களுக்கு தேவையான உரத்தை தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அதேபோல பயிர்களின் வேர் உள்ள பகுதியில் மட்டும் தண்ணீர் விழுவதால், களைச் செடிகள் வளர்வது தடுக்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் காய், கனி மற்றும் மலர்களின் 90 சதவீத மகசூல் முதல் தரமானதாக இருக்கும்.

சொட்டுநீர்ப் பாசனக் கருவிகளின் அளவு, அதாவது வடிகட்டி, உரத் தொட்டி, பிவிசி குழாய்கள், பக்கவாட்டுக் குழாய்கள் மற்றும் சொட்டுவான் உள்ளிட்டவை அரசு நிர்ணயித்துள்ள அளவின்படி வழங்குவதற்கு மட்டுமே மானியம் வழங்கப்படும்.

மானியம் பெற விரும்பும் விவசாயிகள், 100 சதவீத மானியம் பெற சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழை பெற வேண்டும். அதனுடன் கணினி சிட்டா, அடங்கல், நில வரைப்படம், குடும்ப அட்டை நகல், 2 மார்பளவு புகைப்படத்துடன், தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகி விண்ணப்பிக்கலாம்.

அதேபோல சொட்டுநீர் பாசன வசதி அமைக்கப்பட்ட பின், அதில் விவசாயிகள் திருப்தி அடைந்த பின்னரே, சம்பந்தப்பட்ட சொட்டு நீர்பாசன நிறுவனத்திற்கு மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் களை எடுப்பு, உரமிடல் மற்றும் நீர் பாய்ச்சும் செலவும், வேலையாள் தேவையும் 30 சதவீதம் வரை குறையும் என்றார்.

இதுகுறித்து மேலும் விவரங்கள் அறிய 0451 2460522 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

**முதல்போக நெல் சாகுபடிக்கு விரைவில் தண்ணீர் திறக்கப்படுமா?ஜி. ராஜன்**

முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து அணை நீர்மட்டம் 115 அடியை எட்டியுள்ள நிலையில், தேனி மாவட்டத்தில் முதல்போக நெல் சாகுபடிக்கு அணையில் இருந்து தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தேனி மாவட்டத்தில், முல்லைப் பெரியாறு அணை தண்ணீர் மூலம் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், இரண்டுபோக நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. பெரியாறு அணையில் இருந்து, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 1 ஆம் தேதி அணை நீர்மட்டம் 112 அடிக்கு மேல் உள்ளபோது, பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.

கடந்த ஆண்டு, அணை நீர்மட்டம் 112 அடிக்கும் குறைவாக இருந்ததால், ஜூன் 25 ஆம் தேதி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையில் போதிய தண்ணீர் இருப்பின்றி குறித்த பருவத்தில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படாததால், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 2,000 ஏக்கர் பரப்பளவில் மட்டும் முதல் போக சாகுபடி நடைபெற்றது. 13 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான இரண்டு போக சாகுபடி நெல் வயல்களில், ஒருபோக சாகுபடி நடைபெறவில்லை.

தற்போது, தென்மேற்குப் பருவமழையை எதிர்பார்த்து கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் முதல்போக நெல் சாகுபடிக்கு விவசாயிகள் நாற்றாங்கால் அமைத்துள்ளனர். பெரியாறு அணை நீர்பிடிப்பில் மழை பெய்யாததால், இந்த ஆண்டும் ஜூன் 1 ஆம் தேதி அணை நீர்மட்டம் 112 அடிக்கும் குறைவாக இருந்த நிலையில், அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கவில்லை. குடிநீர்த் தேவைக்கு மட்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அணையில் போதிய தண்ணீர் இருப்பு உள்ள நிலையில், பாசனத்துக்கு தட்டுப்பாடு இன்றியும், கடைமடை ஆயக்கட்டு வரை சீராகவும் தண்ணீர் திறக்கும் முடிவில், பெரியாறு அணை நீர்மட்டம் 114 அடியை எட்டியதும், அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட அரசுக்குப் பரிந்துரைக்க பொதுப்பணித் துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. அணையில் இருந்து காலதாமதமாக தண்ணீர் திறந்து விடுவதால், நடவு மற்றும் அறுவடைப் பணிக்கு வேலையாட்கள் பற்றாக்குறை ஏற்படும் என்பதால், அணை நீர்மட்டம் 112 அடியை எட்டியுள்ள நிலையில் அணையில் இருந்து, பாசனத்துக்குத் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் பொதுப் பணித்துறை அதிகாரிகளை வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக பெரியாறு அணை நீர்பிடிப்பில் மழை பெய்து வருகிறது. பெரியாறு அணை நீர்பிடிப்பில் சனிக்கிழமை 60 மி.மீ., மழை பெய்துள்ளது. தேக்கடியில் 70.8 மி.மீ., மழை பெய்துள்ளது. பெரியாறு அணை நீர்மட்டம் 115 அடியாக உள்ளது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 2,230 கன அடி. அணையில் இருந்து குடிநீர் திட்டங்களுக்கு விநாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

வைகை அணை நீர்மட்டம் சனிக்கிழமை 30.8 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 14 கன அடி. அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீர்த் திட்டங்களுக்கு விநாடிக்கு 60 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பெரியாறு அணை நீர்மட்டம் உயர்ந்துள்ள நிலையில், முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

### அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, அவிநாசி வட்டார செயல் வீரர்கள் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது . மாவட்டச் செயலாளர் வி.சி.மகாலிங்கம், வட்டாரத் தலைவர் தெக்கலூர் மணி ஆகியோர் தலைமை வகித்தனர். அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலர் பங்கேற்றனர். வட்டாரச் செயலாளர் பழனி ஆண்டவர், இளைஞர் காங்கிரஸ் பொறுப்பாளர் நவநீதக்கண்ணன், முன்னாள் நகரத் தலைவர் சிவசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அத்திக்கடவு திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்; வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்; அவிநாசி வட்டாரத்தில் அனைத்துப் பகுதிகளிலும், பூத் கமிட்டி அமைத்தல், கல்வெட்டுடன் கூடிய கொடிக்கம்பம் அமைத்தல்; ஜூன் 19 ஆம் தேதி ராகுல்காந்தி பிறந்தநாளை விமர்சையாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கொப்பரை கொள்முதல் ஆதார விலை திட்டம் தொடக்கம்

அவல்பூந்துறை கூட்டுறவுச் சங்கத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் ஆதார விலை திட்டம் சனிக்கிழமை தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கம் தொடங்கிவைத்தார். விவசாயிகளுக்கான ஆதார விலை அட்டையை வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் வழங்கினார்.

விழாவில் அமைச்சர் இராமலிங்கம் பேசியது:

விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையை அறிவித்து, விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை அரசே கொள்முதல் செய்கிறது. இதன் மூலம் வெளிச்சந்தையை விட விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கிறது.

தமிழக அரசு தென்னை விவசாயிகளின் நலன் கருதி ஒரு கிலோ கொப்பரை தேங்காயை ரூ.52.50-க்கு கொள்முதல் செய்கிறது. கேரளம், கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்துதான் தமிழகத்திற்கு தண்ணீர் கிடைக்கிறது.

கர்நாடகத்தில் நிறைய அணைகளை கட்டியபோது கண்டுகொள்ளாமல் வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்த திமுக தலைவர் கருணாநிதி, இப்போது காவிரி நதிநீர் பற்றி பேசுகிறார். முல்லைப்பெரியாறு, காவிரி ஆற்றில் தமிழக உரிமையை முதல்வர் பெற்றுத்தந்துள்ளார் என்றார்.

வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம்: தமிழகத்தில் வடகிழக்கு, தென்மேற்கு பருவ மழை பொய்த்த காரணத்தினால், வறட்சி ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரண நிதியுதவியாக ரூ.3,881 கோடியை முதல்வர் ஒதுக்கியுள்ளார். வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னைக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4,000 வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிய ஒரே மாநிலம் தமிழகம்தான் என்றார்.

விழாவில் ஆட்சியர் வே.க.சண்முகம், ஈரோடு மேயர் ப.மல்லிகா பரமசிவம், துணை மேயர் கே.சி.பழனிச்சாமி, மொடக்குறிச்சி எம்.எல்.ஏ. ஆர்.என்.கிட்டுசாமி, ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் பி.சி.ராமசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் சு.கணேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

### கோபியில் ரூ.5 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.5 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

ஏல விற்பனை விலை விவரம்: செவ்வாழை தார் ரூ.600, ரொபஸ்ட்டோ தார் ரூ.340, பூவன் தார் ரூ.325, ரஸ்தாளி தார் ரூ.400-க்கும், மொந்தன் ரூ.350, தேன்வாழை ரூ.425, பச்சைநாடன் ரூ.200, அதிகபட்சமாக ஏலத்தில் விலைபோனது.

மொத்தம் 4 ஆயிரம் வாழைத்தார்கள் ரூ.5 லட்சத்துக்கு விற்பனையானது. வாழைத்தார் வரத்து குறைந்து காணப்பட்டதால், விலை அதிகமாக இருந்தது.

தேங்காய் ஏலம்: கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் தேங்காய் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது. அதன் விலை விவரம்: தேங்காய் ஒன்று குறைந்தபட்சமாக ரூ.4.5-க்கும், அதிகபட்சமாக ரூ.7-க்கும் விற்பனையானது. மொத்தம் 6 ஆயிரம் தேங்காய்கள் வந்தன. இதன் ஏல விற்பனை மதிப்பு ரூ.40 ஆயிரமாகும். கடந்த வாரத்தைவிட தேங்காய் விலை 50 பைசா குறைந்தது

### மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு மானியம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க ரூ.23 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது என ஆட்சியர் விஜய் பிங்ளே கூறினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மீன்வளத் துறை சார்பில், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பண்ணைக் குட்டைகளில் மீன் உற்பத்தியை ஊக்குவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பண்ணைக் குட்டைகளைப் பயன்படுத்தி நீர் வற்றிய இக்கட்டான காலங்களில் விவசாயிகள் தங்கள் பயிர்களை காத்துக் கொள்ள முடியும்.

இக் குட்டைகளில் மீன் வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதலாக வருவாய் ஈட்டும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகளில் மீன்வளத்துறை சார்பில் மீன் வளர்க்க ஓராண்டுக்கு தேவையான இடுபொருள் (மீன் குஞ்சு, உணவு, உரம்) மானியமாக ஒரு பண்ணைக் குட்டைக்கு ரூ.23 ஆயிரம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

எனவே, இத் திட்டத்தின் மூலம் பயனடைய விரும்பும் ஊரக வளர்ச்சித்துறை மூலம் தேர்வு செய்யப்பட்ட பண்ணைக்குட்டை விவசாயிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி பயன்பெறலாம் என்றார் ஆட்சியர்.

### பெங்களூரா மாம்பழங்கள் விலை உயர வாய்ப்பு'

பெங்களூரா மாம்பழங்களுக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்படும் என, மாம்பழ கொள்முதல் விலை நிர்ணயக் கூட்டத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில், நிகழ் பருவத்தில் பெங்களூரா மாம்பழங்களுக்கான கொள்முதல் விலையை நிர்ணயம் செய்தல் குறித்த கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) பூபதி தலைமை வகித்தார்.

இதில், மா சாகுபடியாளர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், மாங்கூழ் உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டு பெங்களூரா மாம்பழங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 10 ஆயிரம் முதல் ரூ. 12 ஆயிரம் வரை வழங்கப்பட்டதாகவும், தற்போது டன் ஒன்றுக்கு ரூ. 7 ஆயிரம் மட்டுமே வழங்கப்படுவதாகவும், அதை டன் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும் என மா சாகுபடியாளர்கள் வலியுறுத்தினர்.

இதற்கு பதிலளித்த, மாங்கூழ் உற்பத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் மாங்கூழ் ஏற்றுமதி குறைந்துவிட்டதால், உற்பத்தியாகும் மாங்கூழ் விற்பனையாகாமல் தேங்கி, பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

50 சதத்துக்கு மேலான ஆலைகள் மூடப்பட்டு தற்போது 20 ஆலைகள் மட்டுமே இயங்கி வருவதாக தெரிவித்தனர்.

மேலும், மாம்பழங்களுக்கான விலையை கிருஷ்ணகிரி மாவட்ட மாங்கூழ் உற்பத்தியாளர்கள் மட்டுமே நிர்ணயம் செய்ய இயலாது என்றனர்.

வேளாண்மை துணை இயக்குநர் பூபதி பேசியது:

கடந்த வாரங்களில் ஒரு டன்னுக்கு ரூ. 7 ஆயிரம் விலை வழங்கப்பட்ட நிலை மாறி, இனி பெங்களூரா மாம்பழங்களுக்கு ஒரு டன்னுக்கு ரூ. 9,250 வழங்கப்பட உள்ளது.

இனி விலை ஏறுமுகமாக இருக்கும். இறுதி விலை டன்னுக்கு ரூ. 12 ஆயிரம் அல்லது ரூ. 13 ஆயிரத்தைக்கூட எட்டக்கூடும் என்றார் அவர்.

## விவசாய களப் பயிற்சியில் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள்

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் 10 பேர் விவசாய களப்பயிற்சி திட்டத்தின் கீழ் கரூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 15 நாள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்தப் பயிற்சியின் ஒரு பகுதியாக பஞ்சமாதேவி கிராமத்தில் மாரியப்பன் என்பவரது வயலில் நாற்றாங்கால் மூலம் துவரை பயிரிடப்பட்டிருப்பதை பார்வையிட்டு களப் பயிற்சி எடுத்தனர். விவசாயி மாரியப்பன், மானியத் திட்டத்தின் மூலம் விதை மற்றும் இதர இடு பொருள்களைப் பெற்று நாற்றாங்கால் முறையில் பயிரிடப்பட்டிருப்பதாக கூறினார்.

கள ஆய்வுக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி இயக்குநர் வெ. லட்சுமணசுவாமி செய்தார்.

**கால்நடை உணவான "அசோலா' பசுந்தீவன பயிற்சி**

கரூர் மாவட்டம், சின்னதாராபுரத்தில் கால்நடைகளுக்கு உணவுப் பொருளான அசோலா பசுந்தீவனம் வளர்ப்பு குறித்து ஒரு நாள் பயிற்சி சனிக்கிழமை நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நீர் வள நிலவளத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கு சின்னதாராபுரம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற அசோலா பசுந்தீவன வளர்ப்பு ஒருநாள் பயிற்சிக்கு கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி தலைமை வகித்து பேசியது:

கரூர் மாவட்டத்தில் போதுமான மழை இல்லாததால் வறட்சி மிகுந்துள்ளது. இந்த வறட்சிக் காலத்தில் அசோலாவை அடர் தீவனத்துக்கு மாற்றாக கால்நடைகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் அவைகளின் உற்பத்திதிறன் அதிகரிக்கும். கறவை மாடுகளில் பால் உற்பத்தி 10 முதல் 15 சதம் அதிகரிக்கும். பாலில் திடப்பொருள் அதிகம் சேருவதால் பாலுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது. அசோலாவில் 30 சதம் புரதச்சத்து உள்ளதால் கோழிகள் மற்றும் ஆடுகளின் வளர்ச்சியும் அதிகரிக்கும் என்றார்.

இந்தப் பயிற்சியில் 50-க்கும் மேற்பட்ட கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அசோலா வளர்ப்பு குறித்த கையேடு வழங்கப்பட்டது. சின்னதாராபுரம் கால்நடை உதவி மருத்துவர் மோகன்ராஜ் வரவேற்றார். நிறைவில் மருத்துவர் உமாசங்கர் நன்றி கூறினார்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி**

கரூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக் கோழிகளை தாக்கும் நோய்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள் குறித்த இலவச பயிற்சி ஜூன் 20-ம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து இந்த மைய தலைவர் ந. அகிலா வெளியிட்ட செய்திக் குறிப்பு: கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்களும், அவற்றைத் தடுக்கும் முறைகளும் என்ற தலைப்பில் பயிற்சி வரும் 20-ம் தேதி நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்கள், அவற்றைத் தடுக்கும் முறை, மரபுசாரா மருத்துவ முறை, குடற்புழு நீக்கம், தடுப்பூசி அளித்தல், விற்பனை உத்திகள், பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு களப் பயிற்சியும் வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் கலந்துகொள்வோர் காலை 9.30 மணிக்கு பயிற்சி மைய வளாகத்துக்கு வர வேண்டும்.

மேலும் 04324-294335 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றார்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 17.08 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 21 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.**

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 17.08 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 21 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.**

அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு இழப்பீடு கிடைக்குமா?**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட வாழைப் பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

இம்மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக பருவமழை சரியாகப் பெய்யவில்லை. இதனால் நெல் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் நடைபெற்று வந்த நெல் விவசாயம், இப்போது சுமார் 20 ஆயிரம் ஏக்கராக குறைந்துள்ளது.

இதனால் நெல் விவசாயம் செய்து வந்த விவசாயிகள், வாழைப் பயிருக்கு படிப்படியாக மாறி வருகின்றனர். இப்போது மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் கடந்த கும்பப்பூ சாகுபடியில் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல் பயிருக்கும், தென்னைக்கும் வறட்சி நிவாரணம் வழங்க அரசு ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்தது.

மாவட்டத்தில் 295.6 ஏக்கரில் நெல் பயிரும், 12.127 ஏக்கரில் தென்னை பாதிக்கப்பட்டதாகவும் வருவாய்த் துறையினர் நடத்திய ஆய்வில் தெரியவந்தது.

இதையடுத்து 295.6 ஏக்கர் நெல் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் ரூ. 14 லட்சத்து 78 ஆயிரத்து 35 ஒதுக்கப்பட்டது. இதுபோல் 12.127 ஏக்கர் தென்னைக்கு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வீதம் ரூ.4 கோடியே 85 லட்சத்து 10 ஆயிரத்து 800 ஒதுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அந்தந்த பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

எனினும் வறட்சியால் 500 ஏக்கருக்கு மேல் நெல் பயிர் பாதிக்கப்பட்டதாகக் கூறும் விவசாயிகள், தோவாளை கால்வாய்ப் பகுதியில் சுமார் 25 ஏக்கருக்கு மேல் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை வருவாய்த் துறையினர் அவசரகோலத்தில் கணக்கிட்டதாக விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர். எனவே பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை அதிகாரிகள் மீண்டும் ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிக்கு உரிய நிவாரணம் கிடைக்க வேண்டும் என்கின்றனர் இவர்கள்.

இதுபோல் நெல் பயிருக்கு அடுத்து வாழை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக வாழைப் பயிர்கள் சேதமடைந்தன. ஆனால் வாழைக்கு அரசு இழப்பீடு அறிவிக்காதது விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

வாழைக்கு இழப்பீடு கேட்டு விவசாயிகள் பல போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இப்போது பெய்து வரும் மழையில் பூதப்பாண்டி உள்ளிட்ட பகுதிகளில் காற்றில் வாழைகள் சேதமடைந்துள்ளன. மாவட்டத்தில் சுமார் 50 ஏக்கருக்கு மேல் காற்று காரணமாக வாழைகள் சேதமடைந்ததாக விவசாயிகள் கூறுகின்றனர்.

எனவே வாழைக்கும் இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கை ஆகும்.

இன்றைய வேளாண் செய்திகள்

17.06.2013 A.M

---

## வேளாண் பொருட்கள் ஏற்றுமதி ரூ.1.20 லட்சம் கோடி:கொத்தவரை பங்களிப்பு ரூ.21,287 கோடி

கடந்த மூன்று ஆண்டுகளாக, நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டு வருகிறது. சென்ற 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் ஒட்டு மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, 1,20,450 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 86,028 கோடியாகவும், 2010-11ம் நிதியாண்டில், 43,731 கோடி ரூபாயாகவும் இருந்தது என, இந்திய புள்ளியியல் மற்றும் வர்த்தக நுண்ணா#வு தலைமை இயக்குனரகம் (டீ.ஜி.சி.ஐ.எஸ்.,) வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொத்தவரை:நாட்டின் மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், கொத்தவரையின் பங்களிப்பு, 18 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த ஒரு சில ஆண்டுகளாக, மேற்கத்திய நாடுகளின், எண்ணெய் நிறுவனங்கள், இந்தியாவிலிருந்து, அதிகளவில் கொத்தவரையை இறக்குமதி செய்து கொள்கின்றன.எண்ணெய் துரப்பணப் பணியில் கொத்தவரை விதை மிக அதிகஅளவில் பயன்படுத்தப்படுகிறது. கடந்த 2010-11 முதல் 2012-13 வரையிலான, மூன்று நிதியாண்டுகளில் கொத்தவரை ஏற்றுமதி, 624 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.கடந்த 2010-11ம் நிதியாண்டில், கொத்தவரை ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 2,938 கோடி ரூபாயாக இருந்தது. இது, 2011-12ம் நிதியாண்டில், 16,523 கோடியாகவும், 2012-13ம் நிதிஆண்டில், 21,287 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.தொழில் துறை:உலக அளவில், கொத்தவரை உற்பத்தியில், இந்தியா முன்னணியில் உள்ளது. நம்நாட்டில், ஆண்டுக்கு சராŒரியாக, 10-15 லட்சம் டன் கொத்தவரை உற்பத்தியாகிறது. இதில், 40 சதவீதம் தொழில் துறைக்கு

பயன்படுத்தப்படுகிறது.கடந்த 2012ம் ஆண்டில், சர்வதேச சந்தையில், கொத்தவரையின் விலை, 800 - 1,000 சதவீதம் அளவிற்கு அதிகரித்துள்ளது.இதற்கு, இந்தியாவில், பல மாநிலங்களில், ஏற்பட்ட வறட்சியால், கொத்தவரைக்கு பற்றாக்குறை ஏற்படும் என்ற ஐயப்பாட்டால், பல எண்ணெய் நிறுவனங்கள் கொத்தவரையை அதிகளவில் வாங்கியது தான் காரணம் என, இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.நாட்டின் மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், கடந்த 2010-11ம் நிதியாண்டில், கொத்தவரையின் பங்களிப்பு வெறும், 7 சதவீதமாக இருந்தது. அடுத்த இரண்டு நிதி ஆண்டுகளில், இதன் பங்களிப்பு, 11 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

பாசுமதி அரிசி:கொத்தவரைக்கு அடுத்தபடியாக, பாசுமதி அரிசி, சாதாரண அரிசி மற்றும் மலர்கள் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்து உள்ளது.கடந்த பல ஆண்டுகளாக, நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், பாசுமதி மற்றும் சாதாரண அரிசி வகைகள் முக்கிய பங்களிப்பை கொண்டு இருந்தன.கடந்த 2010-11 மற்றும் 2012-13ம் நிதியாண்டுகளுக்கிடையில், பாசுமதி அரிசி ஏற்றுமதி, 71 சதவீதம் வளர்ச்சி கண்டு உள்ளது. கடந்த 2010-11ம் நிதியாண்டில், பாசுமதி ஏற்றுமதி, 11,354 கோடி ரூபாயாக இருந்தது. இது, 2011-12ம் நிதியாண்டில், 15,449 கோடியாகவும், 2012-13ம் நிதியாண்டில், 19,390 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், மத்திய அரசு, சாதாரண அரிசி ஏற்றுமதி மீதான தடையை நீக்கியது. இதைஅடுத்து, கடந்த மூன்று நிதிஆண்டுகளில், இதன் ஏற்றுமதி, 6,000 சதவீதம் அதிகரித்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

அதாவது, கடந்த 2010-11ம் நிதியாண்டில், சாதாரண அரிசி ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 231 கோடி ரூபாயாக இருந்தது. இது, 2011-12ம் நிதியாண்டில், 8,659 கோடியாகவும், 2012-13ம் நிதியாண்டில், 14,421 கோடி ரூபாயாகவும் வளர்ச்சி கண்டு உள்ளது.மலர்கள்:நாட்டின் ஒட்டு மொத்த வேளாண் ஏற்றுமதியில், மேற்கண்ட மூன்று முக்கிய பொருட்கள் தவிர, மலர்கள் ஏற்றுமதியும், குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்து வருகிறது.அதாவது, கடந்த 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் மலர்கள் ஏற்றுமதி, 296 கோடி ரூபாயாக இருந்தது. இது, 2011-12ம் நிதியாண்டில், 365 கோடியாகவும், 2012-13ம் நிதியாண்டில், 423 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. ஆக, மூன்று ஆண்டுகளில்,

மலர்கள் ஏற்றுமதி, 43 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என, டீ.ஜி.சி.ஐ.எஸ்., அமைப்பின் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.-

**வீணாகும் வைக்கோல்களுக்கு கிராக்கி விலை கொடுத்து வாங்கும் வியாபாரிகள்**

செய்யூர்:வயல்வெளிகளில் வீணாகி வந்த வைக்கோலை, நல்ல விலை கொடுத்து வியாபாரிகள் கொள்முதல் செய்வதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சித்தாமூர் ஒன்றியத்தில் உள்ளது அகரம் கிராமம். இங்கு நல்ல நீர் வளம் உள்ளதால் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு போகம் நெல் பயிரை விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறனர்.முதல் போகம் பொன்னி நெல் ரகமும், இரண்டாம் போகம் குண்டு, "டிகேஎம்' ஆகிய குறுகிய கால நெல் பயிர்களை சாகுபடி செய்கின்றனர். முதல் போகத்தில் கிடைக்கும் பொன்னி வைக்கோலை, கூரை வீடுகளின் மேலே போடுவதற்கும், கால்நடைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.நவீன இயந்திரம்இரண்டாம் போகம் பயிரிடும் வைக்கோல் சிறியதாக உள்ளதால், வயல்வெளியிலேயே கொளுத்தி விடுவர். இந்த ஆண்டு சேலம், ஆத்தூர் போன்ற இடங்களில் போதிய வைக்கோல் கிடைக்காததால் வியாபாரிகள் இங்கு வந்து வைக்கோல் வாங்கி செல்கின்றனர். இதற்காக நவீன இயந்திரத்தை கொண்டு வந்து வைக்கோலை சேகரித்து செல்கின்றனர். வீணாகும் வைக் கோல் தற்போது விலையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.விலையாகிறதுஇதுகுறித்து, அகரம் கிராமத்தைச் சேர்ந்த தியாகு கூறுகையில், "எனக்கு சொந்தமான இரண்டு ஏக்கரில் குண்டு நெல் பயிரிட் டேன். கடந்த போகத்தில், பொன்னி பயிரிட்டேன். அதில், கிடைத்த வைக்கோலை, கால்நடைகளுக்காக காய வைத்து பதப்படுத்தினேன்.

"இரண்டாம் போக வைக்கோலை வயல்வெளியிலேயே விட்டுவிடுவோம். இந்நிலையில், வியாபாரிகள் வந்து, அவற்றை விலைக்கு கேட்டதால் கொடுத்து விட்டோம். அவர்களே இயந்திரம் மூலம் வைக்கோல்களை சேகரித்து, கட்டுகளாக கட்டி விடுகின்றனர். ஒரு கட்டுக்கு 12 ரூபாய் தருகின்றனர்' என்றார்.

**விவசாய பணிகளுக்கு கூலி ஆட்கள் பற்றாக்குறை காட்டுப்பாக்கம் கருத்தரங்கில் தீர்வு**

காட்டாங்கொளத்தூர்:""பாரா கலப்பை, நாட்டு கலப்பை, மண் கட்டிகளை உடைக்கும் கருவி, பல்லு பலகை, கூட் பலகை, கருக்கரிவாள் உள்ளிட்ட கருவிகளை பயன்படுத்துவதன் மூலம், விவசாய பணிகளை மேற்கொள்வதில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்கள் பற்றாக்குறைக்கு தீர்வு காணலாம்," என, ஏற்படும் காட்டுப்பாக்கம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற பசுந்தீவன உற்பத்தி கருத்தரங்கில் எடுத்து கூறப்பட்டது.தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத்தின் சார்பில், விவசாயிகளுக்கான இரண்டு நாள் கருத்தரங்கம், காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், நடைபெற்றது. இதில், தீவன உற்பத்தி குறித்து, வேளாண்துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தினர்.தீவன பயிர்முனைவர் காயத்ரி சுப்பையா பேசுகையில், "கால்நடை உற்பத்தி குறைவுக்கு, தீவனப் பற்றாக்குறை மற்றும் தரம் குறைந்த தீவனங்கள், முக்கிய காரணங்களாகும். தரமான தீவனப்பயிர் உற்பத்திக்கு, நல்ல தூய வீரிய விதைகள் கிடைக்காததால், விவசாயிகள் தீவன பயிர் சாகுபடி செய்வதற்கு, தயக்கம் காட்டுகின்றனர். விதை உற்பத்திக்கு, நிலம் தேர்வு செய்யும்போது, தேர்வு செய்த இடம், அதிக மக‹ல் பெறுவதற்கு ஏற்ற இடமாக இருத்தல் வேண்டும்," என்றார்.மேலும், தீவனப் பயிர்களின் வளர்ச்சி வகை, நிலத்தேர்வு, பயிர் இடைவெளி, விதை சேமிப்பு உள்ளிட்டவைகள் குறித்து, விவசாயிகளுக்கு விளக்கி, அவர்களின் சந்தேகங்களுக்கும் அவர் தீர்வு அளித்தார்.கருவிகள் பசுந்தீவன உற்பத்திக்கு தேவையான பண்ணை கருவிகள் குறித்து, முனைவர் சித்தார்த் பேசுகையில், "" தீவனப் பயிர் வெட்டும் கருவியை கொண்டு, தீவன பயிரினை, சிறு துண்டுகளாக வெட்டலாம். மேலும், பசும்புல், காய்ந்த தீவனப் பயிர் மற்றும் வைக்கோல் உள்ளிட்டவைகளை ஒரே சீராக, வெட்டுவதற்கு பயன்படுத்தலாம்," என்றார்.

மேலும், பாரா கலப்பை, நாட்டு கலப்பை, மண் கட்டிகளை உடைக்கும் கருவி, பல்லு பலகை, கூட் பலகை, கருக்கரிவாள் உள்ளிட்ட கருவிகளின் செயல்பாடுகள் குறித்தும், இக்கருவிகளை பயன்படுத்துவதன் மூலம், விவசாய பணிகளை மேற்கொள்வதில் தற்போது, ஏற்பட்டுள்ள ஆட்கள் பற்றாக்குறைக்கு, தீர்வு ஏற்படும் என்பது குறித்தும் அவர் விளக்கினார்.வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் குமாரவேல், மற்றும்

வேளாண்துறை அதிகாரி வேல்முருகன் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**குளங்களில் வளர்க்கப்படும் மீன்களுக்கு வரவேற்பு ஜிலேபி மீன் கிலோ ரூ.40; கட்லா மீன் கிலோ ரூ.90**

திருவள்ளூர்:கிராமப் பகுதிகளில் உள்ள குளங்களில் வளர்க்கப்படும் மீன்களுக்கு, மக்களிடையே மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது. ஜிலேபி மீன் கிலோ, 40 ரூபாய்; கட்லா மீன் கிலோ, 90 ரூபாய் என, விலையும் குறைவாக இருப்பதுடன், கண்ணெதிரே பிடித்து தருவதால், மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.ஏலம் மூலம் விற்பனை திருவள்ளூர் மாவட்டத்தில், ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுக் குளங்களில் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த மீன்களை ஏலம் எடுத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. குளங்களில் விற்கப்படும் மீன்களுக்கு மிகுந்த வரவேற்பு உள்ளது.திருவள்ளூர் ஒன்றியம், பெருமாள்பட்டு ஊராட்சியில் குளம் உள்ளது. இந்தக் குளத்தில், கட்லா, ரோகு, பிலுகண்டி, மொட்லா, மிருகால், சாதா கெண்டை, ஜிலேபி போன்ற மீன்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இந்த மீன்களை ஏலம் எடுத்தவர், மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் விற்பனை செய்து வருகிறார். இதை, பொதுமக்கள் ஏராளமானோர் வந்து வாங்கி செல்கின்றனர்.

மீன் விற்பதற்கு ஏலம் எடுத்த பாலாஜி என்பவர் கூறியதாவது:

மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமை மூலம், இந்தக் குளத்தில் மீன் வளர்த்து, விற்பனை செய்வதற்கு எனக்கு அனுமதி கிடைத்து உள்ளது. நான், 15 ஆண்டுகளாக இக்குளத்தில் மீன்களை வளர்த்து விற்பனை செய்து வருகிறேன்.கட்லா, ரோகு உள்ளிட்ட ஏழு ரக மீன்கள் இக்குளத்தில் வளர்க்கப்படுகிறது. மீன்களுக்கு முதல் ரக தீவனத்தை பயன்படுத்துகிறேன். இதனால், மீன்கள் நல்ல வளர்ச்சி அடைகின்றன. சனி, ஞாயிறு போன்ற நாட்களில், 300 முதல், 400 கிலோ மீன்கள் வரை, பிடித்து விற்பனை செய்வேன். மற்ற நாட்களில், சராசரியாக, 100 கிலோ வரை பிடிப்பேன். இதில், ஜிலேபி மீன் கிலோ, 40 ரூபாய்க்கும், மற்ற மீன்கள் அனைத்தும் கிலோ, 90 ரூபாய்க்கும் விற்பனை செய்கிறேன்.இவ்வாறு, அவர் கூறினார்.சந்தேகம் வருவதில்லை

இதுகுறித்து, மீன் வாங்க வந்திருந்த வேப்பம்பட்டைச் சேர்ந்த சந்திரன் என்பவர் கூறியதாவது:

கடல் மீன்களை விட, இந்த மீன்கள் விலை குறைவாக உள்ளது. மேலும், நம் கண்ணெதிரே பிடித்து வெட்டி தருகின்றனர். இதனால், அவை ஐஸ் பெட்டியில் வைத்து விற்கப்படும் பழைய மீன்களா என, சந்தேகம் வருவதில்லை.

அத்துடன், இவை ருசியாகவும் உள்ளன. கோழிக்கறி தற்போது, கிலோ, 190 ரூபாய்க்கு விற்கும் நிலையில், இந்த மீன்கள் கிலோ, 90 ரூபாய்க்கு கிடைப்பது மிகவும் லாபகரமாக உள்ளது.இவ்வாறு சந்திரன் கூறினார்.

**குறைந்தது!நெல் பயிரிடும் நிலத்தின் பரப்பளவு ... கரும்பு நடவு செய்ய விவசாயிகள் ஆர்வம்**

ஆர்.கே.பேட்டை:உணவுப் பயிரான நெல் பயிரிடும் விவசாய நிலத்தின் பரப்பளவு குறைந்து வருகிறது. இதற்கு மின்வெட்டு, தண்ணீர் பற்றாக்குறை, விவசாய கூலியாட்கள் கிடைக்காதது உள்ளிட்டவை காரணமாக கூறப்படுகிறது. அதே நேரத்தில், பணப் பயிரான கரும்பு நடவு செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில், திருவாலங்காடு, திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை ஆகிய ஒன்றியங்களில் நெல் பயிரிடும் நிலத்தின் பரப்பளவு வெகுவாக குறைந்து விட்டது. உதாரணமாக, மாவட்டத்தில், 2010ம் ஆண்டு, 83,219 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு வந்தது. தற்போது, 52,694 ஏக்கரில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டு வரப்படுகிறது.மொத்த விவசாயத்தில் கரும்பு, 60 சதவீதம், மலர் சாகுபடி, 10 , காய்கறி, 10, நெல், 20 சதவீதம் என்ற அளவில் நடைபெறுகிறது.தட்டுப்பாடு

கரும்பு நடவு செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உணவுப் பயிரான நெல் பயிரிடுவதை தவிர்த்து, பணப் பயிரான கரும்பு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.2010ம் ஆண்டு, 12,698 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டு வந்தது. தற்போது, 30,525 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டு வரப்படுகிறது. இதனால், உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி வருகிறது.

திருவாலங்காட்டில் அமைந்துள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலமாக

விவசாயிகளுக்கு கரும்பு பயிரிட கடன் வழங்கப்படுகிறது. ஆலை நிர்வாகத்துடன் விவசாயிகள் ஒப்பந்தம் செய்து கரும்பு நடவு செய்கின்றனர்.

ஆலை நிர்வாகத்தின் வட்டார அலுவலகங்கள் திருத்தணி, ஆர்.கே. பேட்டை, அத்திமாஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளில் அமைந்துள்ளன. இங்குள்ள களப் பணியாளர்கள், விவசாயிகளிடம் நேரடியாக அணுகி, கரும்பு உற்பத்தியை பெருக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

பணப் பயிர்

கரும்புக்கு தொடர்ந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டிய கட்டாயம் இல்லை. வாரம் ஒரு முறை அல்லது, 10 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது.

கடும் வறட்சி ஏற்பட்டாலும், ஓரளவுக்கு தாக்குப் பிடித்து வளரக் கூடியது.

களையெடுத்தல், பயிர் பாதுகாப்பு என, பெரிய அளவிலான பணிகள் ஏதும் கிடையாது.

நடவும் எளிதானது. நடவின் போதே ஆலை நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்வதால், சந்தை வாய்ப்பு குறித்த கவலையும் கிடையாது.கரும்பு அறுவடைக்கு சேலம் மற்றும் ஆந்திர மாநில தொழிலாளர்களை, ஆலை நிர்வாகமே கூலியாட்களை ஒப்பந்த அடிப்படையில், ஏற்பாடு செய்து தருகிறது.உணவு பயிர்

நெல் பயிர் செய்தால், நடவுக்கு முன்பாக நிலத்தை தயார் செய்வது, நடவு, களையெடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல், உரம் இடுதல், பயிர் பாதுகாப்பு, அறுவடை என, அனைத்து பணிகளுக்கும் கூலியாட்களை எதிர்பார்க்க வேண்டிஉள்ளது. நடவு மற்றும் அறுவடைக்கு இயந்திரங்கள் இருந்தாலும் சிறுவிவசாயிகளுக்கு இது சாத்தியம் இல்லை. மேலும், நெற்பயிருக்கு வயலில் தொடர்ந்து தண்ணீர் தேங்கி நிற்க வேண்டும். தண்ணீர் பஞ்சம் மற்றும் மின்தடையால், பயிர் காய்ந்து வீணாகும் சூழல் ஏற்படுகிறது. மேலும், விவசாய கூலியாட்கள் கிடைப்பதில்லை.

இந்த காரணங்களால், விவசாயிகள் நெல் பயிரிட்டு நஷ்டம் அடைவதை விட, கரும்பு நடவு செய்து லாபம் பார்க்க ஆரம்பித்து விட்டனர். இதனால், மாவட்டத்தின் அரிசி தேவைக்கு கர்நாடகா, ஆந்திர மாநிலம் நிஜாமாபாத் உள்ளிட்ட பகுதிகளை நம்பியே இருக்க வேண்டியுள்ளது.திருத்தணி, ஆர்.கே.பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நெல் மற்றும் அரிசி வணிகர்கள், அண்டை மாநிலங்களில் இருந்து மொத்தமாக கொள்முதல்

செய்து, மாவட்டம் முழுவதும் விற்பனை செய்து வருகின்றனர். கும்மிடிப்பூண்டி, பொன்னேரி பகுதியில் மட்டும் நெல் பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் நெல், செங்குன்றம் பகுதியில் உள்ள நவீன அரிசி ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. 1,500 ஏக்கர் அதிகரிப்புதிருத்தணி கூட்டுறவு சர்க்கலை ஆலை அதிகாரி பாஸ்கரன் கூறியதாவது:திருத்தணி, திருவாலங்காடு, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு ஆகிய ஒன்றியங்களில் இருந்து, ஆலையில் பதிவு செய்யப்பட்டு, ஆண்டுக்கு, 5,865 ஏக்கர் பரப்பளவில், 1,997 விவசாயிகள் கரும்பு பயிரிட்டு வருகின்றனர். இவர்கள் ஆலை நிர்வாகத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, கரும்பு உற்பத்தி செய்து ஆலைக்கு அனுப்பி வருகின்றனர். ஆலை யின் மொத்த கொள்முதலில், 60 சதவீதம், மேற்கண்ட நான்கு ஒன்றியங்களிலும் இருந்து செய்யப்படுகிறது.

இதுதவிர, ஊத்துக்கோட்டை, பொன்னேரி ஆகிய பகுதிகளிலிருந்து, 1,000 ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிட்டு ஆலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், கரும்பு பயிரிடும் பரப்பளவு, 1,500 ஏக்கர் வரை அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.ஊத்துக்கோட்டை, பொன்னேரி ஆகிய பகுதிகளிலிருந்து, 1,000 ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிட்டு ஆலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், பயிரிடும் பரப்பளவு, 1,500 ஏக்கர் அதிகரித்துள்ளது

**நவீன தொழில் நுட்பங்கள் மூலம் விவசாயத்தில் லாபம் பெற முடியும் வேளாண் அதிகாரி தகவல்**

திண்டிவனம்:திண்டிவனம் அருகே உள்ள எண்டியூர் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி குறித்த கருத்தரங்கு நடந்தது.

எண்டியூர் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு நவீன துவரை, திருந்திய நெல் சாகுபடி மற்றும் பண்ணை பயிர் மோலாண்மை திட்டத்தின் கீழ் விவசாயிகள் கணக்கீடு குறித்து சிறப்பு கருத்தரங்கம் நடந்தது.

விழாவிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடிஜெபகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர் முனுசாமி முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் எத்திராஜ் வரவேற்றார்.நிகழ்ச்சியில், வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடிஜெபகுமார்

பேசுகையில், நாளுக்கு நாள் நீர் வளம், மண்வளம் குறைந்து வருவதால், நவீன தொழில் நுட்பங்கள் மூலம் விவசாயம் செய்தால் அதிக லாபம் பெற முடியும். மேலும் விவசாயிகளுக்கு விரைவில் அரசு சார்பில் ஒருங்கிணைந்த பண்ணை கையேடு வழங்கப்படும் என கூறினார்.துணை வேளாண்மை அலுவலர் சவுந்தரராஜன், ஆத்மா திட்ட மேலாளர் சஞ்சாய்காந்தி, உதவி விதை அலுவலர் மாணிக்கவாசு, உதவி வேளாண்மை அலுவலர்கள் சுரேஷ், மஞ்சு, மோகன்குமார் ஆகியோர் கலந்துக் கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் யமுனா நன்றி கூறினார்.
விவசாயிகள் 200 பேர்களிடம் இருந்து பண்னை தகவல் சேகரிப்பு படிவங்கள் பெறப்பட்டன.

**பெங்களூரு ரோஜா செடிகள் சங்கராபுரத்தில் விற்பனை**

சங்கராபுரம்:பெங்களூருவிலிருந்து வரவழைக்கப்பட்ட ரோஜா செடிகள் விற்பனை சங்கராபுரத்தில் படுஜோராக நடக்கிறது.சங்கராபுரம் கடைவீதியில், பெங்களூருவிலிருந்து ரோஜா பூ செடிவரவழைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. பல்வேறு வண்ணங்களில் உள்ள பூ செடி ஒன்று 15 ருபாய் முதல் 20 ருபாய் வரை விற்கப்படுகிறது. கடந்த வாரம் சங்கராபுரம் பகுதியில் பெய்த மழையால் பூமி ஈரப்பதத்துடன் காணப்படுகிறது. இதனால் வீட்டு தோட்டத்தில் நடுவதற்கு பெண்கள் ஆர்வமுடன் ரோஜா செடிகளை வாங்கிச் சென்றனர்

**தமிழகத்தில் நிலவிய வறட்சியால் குச்சிக் கிழங்கு விளைச்சல் பாதிப்பு**

சேலம்: தமிழகத்தில் நிலவிய கடும் வறட்சியால், குச்சிக் கிழங்கு விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஜவ்வரிசி, ஸ்டார்ச் உள்ளிட்ட பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. தமிழகத்தில் விழுப்புரம், சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, கரூர் மாவட்டங்களில், அதிக அளவில் குச்சிக் கிழங்கு பயிரிடப்படுகிறது. நடப்பாண்டு, தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது. நீர் நிலைகளும் வறண்டு விட்டதால், குச்சிக்கிழங்கு உற்பத்தியில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வெயில் தாக்கம் காரணமாக, குறைந்த அளவில் பயிரிடப்பட்ட குச்சிக்கிழங்கும் கருகி விட்டது.

குச்சிக் கிழங்கு விளைச்சல் பாதிப்பால், கொங்கு மண்டலத்தில் செயல்பட்டு வந்த சேகோ ஆலைகளில், 50 சதவீத ஆலைகள் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தி விட்டன. இதனால், மார்க்கெட்டுக்கு ஜவ்வரிசி, மாவு ஜவ்வரிசி, ஸ்டார்ச், கிழங்கு மாவு ஆகியவற்றின் வரத்தில் சரிவு ஏற்பட்டு, விலையும் உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் ஜவ்வரிசி முதல் ரகம் கிலோ, 60 ரூபாய்க்கு விற்றது, 65 ரூபாயாகவும், இரண்டாவது ரகம் கிலோ, 57 ரூபாய்க்கு விற்றது, 62 ரூபாயாகவும், மாவு ஜவ்வரிசி கிலோ, 56 ரூபாய்க்கு விற்றது, 60 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. ஸ்டார்ச் கிலோ, 52 ரூபாய்க்கு விற்றது, 55 ரூபாயாகவும், கிழங்கு மாவு கிலோ, 38 ரூபாய்க்கு விற்றது, 41 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

மூலப்பொருள் விலை உயர்வு காரணமாக, இவற்றில் தயார் செய்யப்படும் பொருட்களின் விலை, 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. குச்சிக்கிழங்கின் உற்பத்தி எதிர்பார்த்த அளவு இல்லாத நிலையில், சேகோ ஆலைகளும் மூடப்பட்டு வருவதால், ஜவ்வரிசி உள்ளிட்ட பொருட்களின் விலை, மேலும் உயர்வு ஏற்படும், என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**ஓசூர் பகுதி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

ஓசூர்; ஓசூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், மாநில வேளாண் விற்பனை வாரிய கோவை மையம் சார்பில், விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் வாரிய உதவி இயக்குனர் அல்தாப், முகாமை துவக்கி வைத்து பேசியதாவது: ராகி, நிலக்கடலை, நெல் ஆகியவற்றினை அறுவடை செய்தபின், அவற்றில் உள்ள கல், மண், தூசி, சருகு, காம்பு ஆகியவற்றை அகற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் நெல்லில், 62 சதவீதம் முழு அரிசி கிடைத்திடும். 80 சதவீதம் முதிர்ந்த நெல் மணியாக கிடைக்கும். நிலக்கடலையில் எண்ணெய் அளவு குறைந்து தரம் கெடாமல் இருக்க செடிகளை பிடுங்கி காய்களை தனியாக பிரித்து எட்டு மணி நேரம் காய வைக்க வேண்டும். ஈரப்பதம், 8 சதவீதம் முதல், 10 சதவீதம் இருக்குமாறு வைத்துக் கொள்ள வேண்டும். ராகியில் ஈரப்பதம், 10 சதவீதம் இருக்குமாறு உலர்த்த வேண்டும். சேமிக்கும் சமயத்தில் பூச்சிகளில் இருந்து பாதுகாப்பு பெற

மாலதியாம் ஒரு சதவீதம் தெளிக்க வேண்டும். வருமானத்தை அதிகரிக்க விளைப்பொருட்கள் வாரியாக பயிர் குழுக்கள் அமைப்பது, பதப்படுத்தல் மற்றும் மதிப்பு கூட்டி விற்பனை செய்வது இன்றியமையாதது. இவ்வாறு பேசினார். ஒருங்கு முறை விற்பனை கூட மேற்பார்வையாளர் வெங்கடஷன் பேசியதாவது: விளைபொருளுக்கு நல்ல விலை கிடைத்திடவும், தரகு, கமிஷன் இன்றி விற்பனை செய்திடவும், குறைந்த வாடகையில் இருப்பு வைக்கவும் வேளாண் துறை அறிவுறுத்தும் நடைமுறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். பொருளீட்டு கடனான, இரண்டு லட்ச ரூபாய் வரை வழங்கப்படுகிறது. உழவர் நலநிதித் திட்டத்தில் இயற்கை அல்லாத மரணத்திற்கு ஒரு லட்சம் வரை வழங்கப்படுகிறது. விற்பனைக்கூட வளாகத்தில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு அமைய உள்ளது. விவசாயிகள், இந்த குளிர்பதன கிடங்கை பயன்படுத்தி பயன் அடையலாம். இவ்வாறு அவர் பேசினார். உதவி வேளாண் அலுவலர் முருகேசன், நன்றி கூறினார். விவசாயிகள், வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சத்தியில் "நவீன' முறையில் தர்பூசணி விவசாயம்**

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள் களையெடுத்தல் மற்றும் பராமரிப்பு செலவு, சிக்கனமாக தண்ணீரை பயன்படுத்தும்படி, பிளாஸ்டிக் காகிதம் விரித்து, அதன் நடுவே நூதன முறையில் செடிகள் பயிரிடுள்ளனர். சத்தியமங்கலம் பகுதி விவசாயிகள் நடவு, களை பறித்தல், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துதல் போன்றவைகளின் செலவை குறைக்க, நவீன யுக்தியுடன் விவசாயம் செய்து வருகின்றனர். பண்ணாரி ரோட்டில் சிக்கரசம்பாளையத்தை சேர்ந்த விவசாயி பழனிச்சாமி. தற்போது பயிரிட்டுள்ள தர்பூசணி மற்றும் சம்பங்கி பயிர்களை நடவு செய்ய, தன் வயலை முதலில் உழுது சீர் செய்து, தேவையான அடி கொண்ட பாத்தி அமைத்தார். பின், அந்த பாத்தியில் சொட்டுநீர் குழாயை அமைத்து, அதற்கு மேல் ஒருவகை பாதிப்பில்லாத வெள்ளை நிற பிளாஸ்டிக் காகிதத்தை விரித்து, இரு பக்கமும் காகிதம் காற்றில் தூக்காதவாறு அமைத்துக்கொண்டார். பின்னர் அந்த காகித்தின் இடையில் ஓட்டை அமைத்து, அதற்குள் தர்பூசணி மற்றும் சம்பங்கி நாற்றை நட்டுருக்கிறார்.

இதனால் சம்பந்தப்பட்ட நாற்றுக்கு மட்டும் சூரிய ஒளி விழுகிறது. மற்ற இடங்களில் சூரிய ஒளி படாததால், தேவையில்லாத செடிகள் முளைத்து, களையெடுக்கும் செலவு மிச்சமாகிறது. சூரிய ஒளியில் தண்ணீர் வீணாவதும் தடுக்கப்படும். தண்ணீர் செலவு குறைவதால், வறட்சியிலும் விவசாயம் பாதிப்பதில்லை. இதன் மூலம் மகசூல் அதிகமாகும் என வேளாண் துறையினர் கூறிய யோசனைப்படி நடவு செய்துள்ளதாக, பழனிச்சாமி தெரிவித்தார். இதைத்தொடர்ந்து, அப்பகுதியில் பல்வேறு விவசாயிகள், இதை பின்பற்றி நடவுப்பணி செய்துள்ளனர்.

**தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் பயிற்சி**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தீவிர வெள்ளாடு வளர்ப்பு திட்டம் மற்றும் எருமை மாடு வளர்ப்பு திட்ட பயிற்சி முகாம் நடந்தது. வெள்ளாடு வளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம், மக்களின் விலங்கின புரத தேவையை ஈடுகட்டும் விதமாக, மத்திய அரசால் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தேசிய புரத சத்து முனைப்பு இயக்கம் துவங்கப்பட்டுள்ளது. அயல்நாடுகளில் தினமும், 200 கிராம் இறைச்சி ஒரு மனிதனுக்கு கிடைக்கிறது. ஆனால், இந்தியாவில், ஒரு மனிதன் தினமும் உட்கொள்ளும் இறைச்சியின் அளவே, 26 கிராம் மட்டுமே. எனவே ஆட்டு இறைச்சியின் உற்பத்தியை அதிகரித்து, புரதத்தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, தீவிர வெள்ளாடு வளர்ப்பு திட்டம் துவங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில், 15 மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்துக்கும், எட்டு யூனியனில், சுய உதவிக்குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழுவிலும், ஒன்பது நபர்களுக்கு, தலா ஒன்பது பெட்டை ஆடு மற்றும் ஒரு கிடா வீதம், ஒரு குழுவுக்கு, 81 பெட்டை ஆடுகளும், ஒன்பது கிடா என மொத்தம், 90 வெள்ளாடுகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும். ஈரோடு மாவட்டத்தில், 72 பயனாளிகளுக்கு மொத்தம், 720 வெள்ளாடுகள் வழங்கப்பட உள்ளது. இதற்கான பயிற்சி, ஈரோடு கால்நடை பயிற்சி மையத்திலும், பொலவக்காளிபாளையம் கால்நடை மருந்தகத்திலும் நடந்தது. இப்பயிற்சி முகாமை கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் ராமலிங்கம் துவக்கி வைத்தார். கால்நடை மருத்துவ பல்கலைக்கழக

உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர் யசோதை முன்னிலை வகித்தார். டாக்டர்கள் பிரேம்குமார், மாரியப்பன், அலமேலு ஆகியோர், வெள்ளாடு மற்றும் எருமை வளர்ப்பு குறித்து விளக்கினர்.

**விவசாயிகள் குறைதீர் முகாம்: 21ல் நடப்பு**

தஞ்சாவூர்: "மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் வரும், 21ம் தேதி நடக்கிறது. இதில், விவசாயிகள் பங்கேற்று, குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்' என, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் இம்மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் வரும், 21ம் தேதி காலை, பத்து மணிக்கு நடக்கிறது. இதில் புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு திட்ட விளக்கம் அளிக்கப்படும். மேலும் கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல்துறை, நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய துறைகள் குறித்து கருத்துக்களை கூறலாம்.
கருத்துக்களை கூற முன்கூட்டியே விவசாய சங்க பிரதிநிதிகள், தங்களது பெயர், ஊர் மற்றும் வட்டாரத்தை காலை, 8.30 மணி முதல், பத்து மணி வரை, கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில், முதல் இரண்டு பேர், கருத்துக்களை கூற அனுமதிக்கப்படுவர்.

**வேப்பமரத்தில் அற்புதமான "வீரிய ஊக்கி'கால்நடை டாக்டர் கண்டுபிடிப்பு**

தேனி:தேனியை சேர்ந்த, கால்நடை அரசு டாக்டர் உமாகாந்தன், மருந்து, பெட்ரோல் உள்ளிட்டவைகளின் சக்தியை அதிகரிக்கும், "வீரிய ஊக்கி'யை கண்டுபிடித்து உள்ளார். இதற்கான வேதிப் பொருள், வேப்பமரத்தில் அதிகம் இருப்பது, கண்டறியப்பட்டு உள்ளது.போடி மீனாட்சிபுரத்தை சேர்ந்த இவர், பொள்ளாச்சி கஞ்சம்பட்டி அரசு மருத்துவமனையில் பணிபுரிகிறார். கடந்த எட்டு ஆண்டு ஆராய்ச்சியில், "வீரிய ஊக்கி' (பொட்டன்ஷியேட்டர்) என்ற, ஒரு வகை உப்பை கண்டுபிடித்துள்ளார். அவர்

கூறியதாவது:"பென்சிலின்' என்பது "ஆன்டிபயாடிக்' சக்தி கொண்டது. வேப்பமரத்துக்கும், அதே சக்தி உண்டு. வேப்பமரம், பல நூறு ஆண்டுகளாக, அதே சக்தியுடன் உள்ளது; ஆனால், "பென்சிலின்' விஷமாக மாறி வருகிறது. இதை முன்வைத்து, ஆராய்ச்சி செய்தேன்.

"நிம்பின்' என்ற வேதிப்பொருள் மூலம், "ஆன்டிபயாடிக்' தன்மையை, வேப்பமரம் அதிகரிக்கச் செய்து கொள்கிறது; "பென்சிலின்', மாற்றிக்கொள்வதில்லை.

இந்த மாற்றத்தை உருவாக்கும், "நிம்பின்' குறித்து ஆராயப்பட்டது. அது, "பொட்டன்ஷியேட்டர்' எனப்படும் "வீரிய ஊக்கி உப்பு' என, கண்டறியப்பட்டது. இந்த "வீரிய ஊக்கி' யை, குறைந்த அளவு மருந்துடன் சேர்த்து பயன்படுத்தினால், அதிக வீரியம் கிடைக்கும். குறைந்த அளவு "ஆன்டிபயாடிக்' மருந்து, பயன்படுத்தினால் போதும்.

இதை, பெட்ரோல், டீசலில் குறிப்பிட்ட அளவு சேர்த்தால், எரிபொருள் சிக்கனம் கிடைக்கும்; மாசு உண்டாக்கும் புகை அளவை குறைக்கலாம். இதே போல மண்ணெண்ணெய், நல்லெண்ணெய், பசும்பால், நெய்யில் சேர்த்து, ஆராய்ச்சி செய்யப்பட்டது; இதில், பயனுள்ள முடிவுகள் கிடைத்தன.

விவசாயம் மற்றும் சிமென்ட், ரப்பருடன், சரியான விகித்தில் பயன்படுத்தினால், வீரியம் அதிகரிக்கும்; செலவு குறையும். இதே போல, 14 "வீரிய ஊக்கி' இருப்பதை கண்டுபிடித்துள்ளோம். தற்போது, ஒரு "ஊக்கி' யின் பயனை மட்டுமே கூறியுள்ளோம். அரசிடம், இந்த ஆராய்ச்சியை நிரூபிக்க தயாராக உள்ளேன், என்றார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

சிவகங்கை:""சிவகங்கை, கலெக்டர் அலுவலகத்தில் ஜூன் 21 அன்று காலை 10.30 மணிக்கு, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும். இதில், விவசாயிகள் பங்கேற்று அத்துறை சார்ந்த புகார் தெரிவிக்கலாம்,'' என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

**நூறு சத மானியத்தில் சொட்டு நீர் பாசன கருவி கலெக்டர் தகவல்**

சிவகங்கை:""சிறு, குறு விவசாயிகளுக்கு 100, இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்படும்," என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: கரும்பு, வாழை, தென்னை, மா, கடலை மற்றும் காய்கறி பயிர்கள் 35 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வருகிறது. இதில், 10 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே நுண்ணீர் பாசன கருவி மூலம், பாசனம் அளிக்கப்படுகிறது. எஞ்சிய பரப்பிற்கு சிக்கன முறையில் சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன கருவிகள் அமைத்து, சாகுபடி செய்ய முடியும். அரசு மூலம், சிறு, குறு விவசாயிகளுக்கு சாகுபடி செய்யும் மொத்த பரப்பிற்கு 100; இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில், கருவிகள் வழங்கப்படும். இதற்காக, கிராமங்கள் தோறும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். இதில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம், என்றார். விவசாய துறை இணை இயக்குனர் செல்லத்துரை, தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன், செயற்பொறியாளர் ராஜகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

![தினகரன்]

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.06.2013 A.M**

---

## கரூர் மாவட்டத்திற்கு விரைவில் ரூ26 கோடி வறட்சி நிவாரணம் அமைச்சர் பேச்சு

க.பரமத்தி, : க.பரமத்தி ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் கூட்டம் பரமத்தியில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் வீராச்சாமி தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் மார்க்கண்டேயன் வரவேற்றார். அரவக்குறிச்சி தொகுதி கழக செயலாளர் லோகநாதன், இணை செயலாளர் இளங்கோவன், மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு தலைவர் ராதா, மாணவர் அணி செயலாளர் விவேகானந்தன், இலக்கிய அணி செயலாளர் மணி, இளைஞர் அணி செயலாளர் பாலசுப்பிரமணி முன்னிலை வகித்தனர். மாவட்ட துணை செயலாளர் காளியப்பன், பொருளாளர் முரளி, முன்னாள் மாவட்ட செயலாளர் ராஜா என்.பழனிச்சாமி ஆகியோர் பேசினர்.

போக்குவரத்து துறை அமைச்சர் செந்தில் பாலாஜி பேசுகையில், கரூர் மாவட்டத்திற்கு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ரூ.26 கோடி வறட்சி நிவாரணம் விரைவில் வழங்கப்பட உள்ளது. தகுதியானவர்கள் விரைவில் பயன்பெறுவர் என்றார். மாற்று கட்சியை சேர்ந்த 40பேர் அமைச்சர் முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர். கரூர் எம்பி தம்பிதுரை, ஊராட்சி தலைவர்கள் புன்னம் சுப்பிரமணியம், விசுவை சக்திவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒன்றிய பொருளாளர் பொன்சரவணன் நன்றி கூறினார்.

## மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை குறைவு விவசாயிகள் விரக்தி

கரூர், : கரூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பொழியாததால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் குறைந்த மழையளவு பெறும் மாவட்டங்களில் கரூரும் ஒன்றாக உள்ளது. தர்மபுரி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஆண்டு சராசரி மழையளவு மிகவும்

குறைவு.

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.20 மி.மீட்டர். இது ஜனவரியில் இருந்து டிசம்பர் வரை பெய்யும் மழையளவாகும். இதில் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பெய்யும் மழை மற்றும் ஏப்ரல், மே மாதங்களில் பெய்யும் கோடை மழை மற்றும் தென்மேற்கு பருவ மழையின் மூலம் 238 மி.மீட்டர் மழையும், அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்கு பருவ மழை மூலம் 287 மி.மீட்டர் மழையும் பெறப்படு கிறது. இந்நிலையில் 2011ம் ஆண்டு 8685.46 மிமீ மழை பொழிந்துள்ளது. இதன் மொத்த சராசரி 723.87 ஆகும். ஆனால், 2012ம் ஆண்டு முழுதும் 6332.46 மிமீ மழைதான் பெய்துள்ளது. இதன் மொத்த சராசரி 527.705 ஆகும். 2012ம் ஆண்டில் ஆண்டு சராசரி மழை கூட பெய்யவில்லை.

ஆண்டுக்கு ஆண்டு கரூர் மாவட்டத்தில் மழையளவு குறைந்து கொண்டே வருகிறது. இத னால், கிணற்றுப்பாசன விவசாயிகளும், காவிரி மற்றும் அமராவதி ஆற்றுப்பாசன விவசாயிகளும் கடும் விரக்தியில் உள்ளனர். ஆண்டுதோறும் ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பெய்யும் மழை தென்மேற்கு பருவமழை எனவும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை பெய்யும் மழை வடகிழக்கு பருவ மழை எனவும் அழைக்கப்படுகிறது. ஆண்டுதோறும் தென் மேற்கு பருவமழையை விட வடகிழக்கு பருவமழை காலத்தில்தான் அதிக மழை கிடைத்து வருகிறது.

இந்நிலையில், இந் தாண்டு ஜூன் மாதம் தென் மேற்கு பருவமழை துவங்கியது. இந்த சீசனில் தமிழகத்தில் நல்ல மழை பெய்யும் என வானிலை அறிவித்துள்ளது. ஆனாலும், ஜூன் மாதம் துவங்கி 17 நாட்கள் ஆகியும் குறிப்பிடத்தக்க அளவு மழை பெய்யாமல் உள்ளது. கடந்த 2011ம் ஆண்டு தென்மேற்கு பருவமழையின் துவக்கமான ஜூன் மாதம் 107.10மிமீ மழை பொழிந்தது. ஆனால், 2012ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் கரூர் மாவட்டத்தில் 83மிமீ மழைதான் பதிவாகியுள்ளது. இதன்படி, ஆண்டுக்கு ஆண்டு தென் மேற்கு பருவமழை பெறும் அளவு குறைந்து கொண்டே வருகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஜூன் மாதம் துவங்கி இதுநாள் வரை குறிப்பிடத்தக்க அளவு மழை பெய்யவில் லை. கடந்த மே மாதம் பெய்த மழை அளவு கூட இதுநாள் வரை பெய்யவில்லை. தென்மேற்கு பருவ மழை காலம் செப்டம்பர் வரை உள்ளதால் இனி வரும்

காலங்களில் மழை பொழிந்தால்தான் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள் அந்தந்த பகுதியில் நிலவும் சீசனுக்கு ஏற்ப விவசாயம் செய்ய முடியும். எனவே, தென்மேற்கு பருவமழை இனி வரும் நாட்களில் தவறாது பெய்யுமா என அனைத்து விவசாயிகளும் எதிர்நோக்கியுள்ளனர்.

## குறுவை பட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்தால் அதிக மகசூல் வேளாண் அதிகாரி தகவல்

வலங்கைமான், : வலங்கைமான் வட்டார பகுதிகளில் குறுவை பட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தேவேந்திரன் தெரிவித்துள்ளார்.

வலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தேவேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

டெல்டா பாசன பகுதிகளில் குறுவை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார். எனவே வலங்கைமான் வட்டாரத்தில் மின் வசதி உள்ள போர் வெல் விவசாயிகள் குறுவை பருவத்தில் உற்பத்தி திறனை உயர்த்த திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்ற வேண்டும். குறைந்த விதை, இளம் நாற்றுகளை நடவு செய்தல், அதிக இடைவெளியில் சதுர முறையில் நடவு செய்தல், களைக்கருவி பயன்பாடு, நீர் மறைய நீர் பாய்ச்சுதல் ஆகியவை இம்முறையின் சிறப்பு அம்சமாகும்.

ஒரு ஏக்கர் நடவு செய்ய 3 கிலோ விதை, ஒரு சென்ட் நாற்றங்கால் போதுமானது. விதைகள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் புளுரோசென்ஸ் மற்றும் நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் ஒரு பாக்கெட், பாஸ்போ பாக்டீரியா ஒரு பாக்கெட் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

மேலும் முளைப்பு கட்டி பின் விதைப்பு செய்ய வேண்டும். ஒரு மீட்டர் அகலம், 5 மீட்டர் நீளமும் பரப்பு கொண்ட 8 மேடை பாத்திகள் அமைத்து விதைகளை தூவி நாற்றங்கால் மீது வைக்கோல் பரப்பி பூவாளி மூலம் 3 நாட்களுக்கு தண்ணீர் தெளிக்க வேண்டும்.

பின்னர் வைக்கோலை நீக்கிவிட்டு சாதாரண முறையில் பாசனம் செய்ய வேண்டும். இதையடுத்து நன்கு சமன்படுத்தப்பட்ட வயலில் 14 நாட்கள் வயதுடைய இளம் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். நடவு செய்த பத்தாவது நாள் முதல் பத்து நாட்கள் இடைவெளியில் கோனா களைக்கருவி மூலம் களைகளை நீக்க வேண்டும். இதன் மூலம் பழைய வேர்கள் அறுபட்டு புதிய வேர்கள் தோன்றுகின்றன. இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தழைச்சத்து நிர்வாகம் செய்ய வேண்டும். நெற்பயிருக்கு பரிந்துரைக்கப்படும் இதர தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றினால் சாதாரண நெல் நடவு முறையில் பெறும் மகசூலை விட திருந்திய நெல் சாகுபடி முறையில் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெறலாம்.

## மருத்துவம், வேளாண்மை துறைக்கு வீரிய ஊக்கி பவுடர் கண்டுபிடிப்பு தேனியில் விஞ்ஞானி விளக்கம்

தேனி, : மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட துறைகளுக்கு தேவைப்படும் வீரிய ஊக்கி புவுடர் கண்டுபிடித்தது குறித்து தேனி மாவட்டத்தை சேர்ந்த விஞ்ஞானி விளக்கம் அளித்தார்.

தேனி மாவட்டம் போடி அருகே மீனாட்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் உமாகாந்தன். பொள்ளாச்சி அருகே கஞ்சம்பட்டியில் கால்நடை மருத்துமனையில் அறுவைச் சிகிச்சை நிபுணராக பணிபுரிகிறார். கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட 14 துறைகளில் பயன்படக்கூடிய வேதிப்பொருள் ஒன்றை கண்டுபிடித்துள்ளார். இதற்கு வீரிய ஊக்கி பவுடர் என பெயரிட்டுள்ளார். இதன் அறிமுக கூட்டம் தேனியில் நேற்று நடந்தது.

இதில் விஞ்ஞானி உமாகாந்தன் மற்றும் அவருக்கு உறுதுணையாக உள்ள அவரது மகள் உமாதேவி ஆகியோர் கூட்டத்தில் பேசியதாவது:

எட்டு ஆண்டுகளாக மனிதர்கள், தாவரங்கள், விலங்குகளுக்கு நன்மை தரக்கூடிய வகையில் ரசாயனக் கலவையான ஒரு வீரிய ஊக்கி பவுடர் கண்டுபிடித்துள்ளோம். இக்கலவையைக் கொண்டு மருத்துவம், பெட்ரோல், நூல், சிமென்ட், பசும்பால் கெடாமல் இருக்க, விவசாயம் செழிக்க என 14 வகைக் கூறுகள் சம்பந்தமாக ஆராய்ச்சி

செய்யப்பட்டது.

இதில் வீரிய ஊக்கி பவுடரை மனிதர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்படும்போது, நோயாளிகளுக்கு வழங்கும் ஆண்டிபயாடிக் மருந்துடன் வீரிய ஊக்கி பவுடரை கலந்து கொடுக்கலாம். வழக்கமாக வழங்கும் அளவைக் காட்டிலும் மிக குறைவான அளவில் ஆண்டிபயாடிக் மருந்தை கொடுத்தால் போதும். இந்த வீரிய ஊக்கி பவுடர் அதனை சரிகட்டிவிடும்.

மிகக் குறைவான அளவில் ஆண்டிபயாடிக் மருந்து கொடுப்பதன் மூலம் உடலில் பக்க விளைவுகள் ஏதும் ஏற்படாது. நோய் எதிர்ப்பு சக்தி குறையும்போது சற்று ஆண்டிபயாடிக் அளவை கூட்டிக்கொள்ளலாம்.

இதேபோல, விவசாய சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளில் இத்தகைய வீரிய ஊக்கி பவுடரை தண்ணீரில் கலந்து தெளிக்கும்போது, மிகக் குறைந்த அளவு உரம், பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தால் போதும். இதன்மூலம் அதிக மகசூல் பெறலாம்.

கட்டுமான பணிக்கு பயன்படுத்தப்படும் சிமெண்ட்டில் இந்த வீரிய ஊக்கி பவுடரை கலந்து பயன்படுத்தும்போது, இறுகும் தன்மை அதிகரிக்கும். இதனால் சிமெண்ட் குறைந்த அளவில் பயன்படுத்தலாம்.

பெட்ரோல், டீசல்களில் வீரிய ஊக்கி பவுடரை கலந்து பயன்படுத்தினால், பூமியை வெப்பமயமாக்கும் புகையை தடுப்பதோடு, மைலேஜும் அதிகரிக்கும். பழைய இன்ஜினையே புது இன்ஜின் போல பயன்படுத்தலாம். நூல் தயாரிக்கும்போது, இந்த பவுடரை பயன்படுத்தினால், நூல் ஆயுட்காலம் அதிகரிக்கும். இத்தகைய கண்டுபிடிப்புகளுக்கு பல்வேறு பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சித்துறை பேராசிரியர்கள் உதவினர்.

இத்தகைய வீரிய ஊக்கி சம்பந்தமாக அரசு விளக்கம் கேட்டால் விளக்க தயாராக இருக்கிறோம். இதன் காப்புரிமைக்கு அமெரிக்கா பல்லாயிரம் கோடி விலை பேசியது. இதற்கு நான் விலைபோகவில்லை, இக்கண்டுபிடிப்பு அங்கீகரிக்கப்பட்டால், இதில் இருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இந்தியாவில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், விடுதிகளில் உணவு, தங்குமிடம் இலவசமாக

வழங்கப்படும். மேலும் ஆலயங்களில் அன்னதானம் வழங்கப்படும். இதிலிருந்து கிடைக்கும் பணத்தை சுயலாபத்திற்கு பயன்படுத்த மாட்டேன்Õ என்றார்.
கூட்டத்தில் கண்டுபிடிப்பு குறித்தும், தங்களது ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு செய்தது குறித்தும், பல்வேறுத்துறை ஆராய்ச்சியாளர்கள், உமாகாந்தனை பாராட்டி பேசினர்.

## சின்னமனூர் பகுதியில் நாற்றங்கால் பாவ விவசாயிகள் காத்திருப்பு

சின்னமனூர், : சின்னமனூர் பகுதியில் முதல் போகத்திற்காக வயல் வெளிகளில் மண்ணை புரட்டி போட்டு நாற்றாங்கால் பாவுவதற்காக விவசாயிகள் தயாராக உள்ளனர்.
பருவமழை பெய்யுமா அல்லது அணை திறக்கப்படுமா என விவசாயிகள் ஆவலுடன் காத்திருக்க்கின்றனர்.
சின்னமனூர் பகுதியில் முல்லைப்பெரியாற்று பாசனத்தால் நான்காயிரம் ஏக்கர் வயல் வெளிகளில் வருடம் இரண்டு போகம் நெல் விவசாயம் செய்யப்படுகிறது.
வழக்கமாக ஜூன் முதல் தேதியே அணையில் தண்ணீர் திறக்கப்பட்டவுடன் தயாராக இருக்கும் விவசாயிகள் உடனடியாக நாற்றாங்கால் பாவ விதை நெல்தூவி 25 நாட்களில் நாற்றாக வளர்ப்பர். பின்னர் நடவு பணியினை ஒரு மாததத்தில் நிறைவு செய்வர்.
தற்போது பருவமழை தாமதமாகி வருகிறது. அணையில் போதியளவு தண்ணீர் இல்லாததால் வழக்கமாக திறக்கப்படும் தண்ணீர் இன்னும் திறக்கப்படவில்லை.
தற்போது அணையின நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால் அணையில் தண்ணீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதனால் விரைவில் அணையில் தண்ணீர் திறக்கப்படும் என்ற நம்பிக்கை விவசாயிகளின் மத்தியில் எழுந்துள்ளது.
அதற்காக சின்னமனூர், மார்க்கயன்கோட்டை, வேம்படிகளம், முத்துலாபுரம் பிரிவு, போன்ற பல இடங்களில் விவசாயிகள் வயல்வெளிகளை டிராக்டர்களின் மூலமாக மண்ணணை புரட்டி போட்டு, மாட்டு சாணத்தையும் கலந்து பண்படுத்தி தயார் நிலையில் வைத்துள்ளனர்.

## சாத்தூர் விவசாயிகளுக்கு $7.49 கோடி நிவாரணம் உதயகுமார் எம்எல்ஏ தகவல்

சாத்தூர், : சாத்தூர் பகுதி விவசாயிகளுக்கு தமிழக அரசு ரூ.7 கோடியே 49 லட்சம் வறட்சி நிவா ரணத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உதயகுமார் எம்எல்ஏ தெரிவித்தார். விருதுநகர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசின் வறட்சி நிவாரண நிதி வழங்கப் பட்டு வருகின்றன.

சாத்தூர் அருகே மேட்டமலை கிராமத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. ஒன்றிய தலைவர் வேலாயுதம் தலைமை வகித்தார்.

வறட்சி நிவாரண நிதியை வழங்கி உதயகுமார் எம்எல்ஏ பேசுகையில், Ôதமிழகத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தமிழக முதல்வர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பருவமழை பொய்த்துவிட்ட நிலையில் விவசாயிகளின் பாதிப்பை அறிந்த தமிழக முதல்வர் வறட்சி நிவாரண தொகையை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

சாத்தூர் பகுதிக்கு மட் டும் ரூ.7 கோடியே 49 லட்சம் வறட்சி நிவாரண தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் பாதுகாவலனாக முதல்வர் உள்ளார்Õ என்றார்.

நிகழ்ச்சியில் தொகுதி செயலாளர் சேதுராமானுஜம், ஒன்றிய செயலாளர் சண்முகக்கனி, திட்டக்குழு உறுப்பினர் வாசன், ஒன்றிய துணைத்தலைவர் செல்வராணி, நகராட்சி துணைத் தலைவர் கிருஷ்ணன், முன்னாள் ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், அம்மா பேரவை தமிழ்செல்வன் உட்பட பலர் பலந்த கொண்டனர்.

## இந்தியாவில் உற்பத்தியாகும் உணவு தானியங்களில் 38 சதவீதம் வீணாகிறது சூழியல் விஞ்ஞானி தகவல்

நாகர்கோவில், :

நாகர்கோவிலில் ஹீல் தொண்டு நிறுவனம் மற்றும் மாநில அளவிலான இளையோர் சூழியல் உரிமைகள் கூட்டமைப்பு சார்பில் உலக சுற்றுச்சூழல் தினவிழா நடந்தது. விழாவிற்கு தலைமை வகித்து சூழியல் விஞ்ஞானி டாக்டர் சந்தானகுமார் பேசியதாவது: நாமும் வாழ்ந்து பிற உயிரினங்களுக்கும் வாழும் சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதே சுற்றுச்சூழல் தினத்தின் நோக்கமாகும். இந்த ஆண்டு �சிந்தனை செய், சாப்பிடு, மிச்சப்படுத்து� என்ற சிந்தனையுடன் இந்த தினம் கொண்டாடப்படுகிறது. இன்று

நீராதாரங்கள் நெருக்கடியான நிலையில் உள்ளன. எந்த ஒரு உயிரினத்திற்கும் தண்ணீர் தேவையாக உள்ளது. ஆனால் பாய்ந்தோடும் நதிகள், இன்று பயந்தோடிக் கொண்டிருக்கின்றன. மனிதன் எங்கே தடைபோடுவானோ, என்ன கேடு செய்வானோ என்ற அச்சமே அதற்கு காரணம்.

தாவரங்கள் தானும் சாப்பிட்டு நாம் சாப்பிடவும் வழிவகை செய்கின்றன. தண்ணீர் மட்டுமல்ல எல்லா உணவு பொருட்களையும் நாம் தேவைக்கு தகுந்தவாறு உற்பத்தி செய்து பயன்படுத்த வேண்டும். உணவை வீணாக்கும்போது உணவு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்ற இயற்கை வளங்களும், மனித ஆற்றலும் வீணாகின்றன. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற உணவு தானியங்களில் 38 சதவீதம் வீணாகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

கடல் சிப்பி தொழிலாளர் கூட்டமைப்பு தலைவர் குற்றாலம், பொருளாளர் குமரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைப்பின் உறுப்பினர் சங்கீதா வரவேற்றார். ஹீல் தொண்டு நிறுவன இயக்குனர் சிலுவை வஸ்தியான் விழாவின் நோக்கம் குறித்து பேசினார். கடல் சிப்பி தொழி லாளர் கூட்டமைப்பு செய லாளர் விஷ்ணுகுமாரி, மத்திய அரசு தொழிலாளர் நலத்துறை ஆலோசனை குழு உறுப்பினர் தாரகை கத்பர்ட், நாகர்கோவில் டிஎஸ்பி உதயகுமார், டாக்டர் ரிச்சர்ட் கென்னடி, டாக்டர் சாம்ராஜ் உள்ளிட் டோர் கலந்து கொண்டு பேசி னர். விழாவில், 10, பிளஸ் 2 தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற சிப்பி தொழிலாளர்கள் குழந்தைகளுக்கு பரிசுகளும், சாதனையாளர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

## வறட்சி காரணமாக வங்கி கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

மண்ணச்சநல்லூர், : வறட்சி காரணமாக விவசா யம் பாதித்துள்ளதால் விவசாயிகள் வங்கியில் பெற்ற கடனை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாவட்ட செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் மண்ணச்சநல்லூர் அடுத்த சா.அய்யம்பாளையத்தில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் ஜெயராமன் தலைமை வகித்தார். கிளைத் தலைவர் ராமமூர்த்தி வரவேற்றார். கிளை நிர்வாகிகள் மேலூர் திருப் பதி, சாலக்காடு ராஜாமணி, எதுமலை தங்கராசு, வலை யூர் அயினான், பாலையூர் வீராச்சாமி முன்னிலை வகித்தனர். மாநில தலைவர் விசுவநாதன் பேசினார்.

கூட்டத்தில், சா.அய்யம்பாளையம் கிராமத்தில் வேளாண்மை கூட்டுறவு வங்கி திறக்கவில்லை என் றால் வரும் 27ம் தேதி மண்ணச்சநல்லூரில் மறியல் போராட்டம் நடத்தப்படும். வலையூர் கிராமத்தில் பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் அனைவருக் கும் நிவாரணம் வழங்க வேண்டும். தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வங்கிகள் அனை த்து விவசாயிகளின் விவசா யக் கடன்களையும் தள்ளு படி செய்ய அரசை கேட்டுக்கொள்வது. எதுமலை கருப்பு கோயில் ஓடையை தூர்வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விவசாய சங்க நிர்வாகிகள் தங்கராசு, கோவிந்தசாமி, ரங்கநாதன், நல்லசெல்வம், ராமசாமி, வலை யூர் குபேந்திரன், எதுமலை அழ கேசன், கருங்காடு பெரியசாமி, சந்திரன் உள் பட பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய துணைத்தலைவர் மணிகண்டன் நன்றி கூறினார்.

## அதிக மகசூல் பெற விதை பரிசோதனை அவசியம் அதிகாரி வேண்டுகோள்

திருச்சி, : அதிக மக சூல் பெற விதை பரி சோதனை அவசியம் என்று திருச்சி விதை பரிசோதனை நிலைய அலு வலர் எழில் அரசு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

அதிக மகசூலை பெறுவதற்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவது நல்ல தரமான விதையே. எனவே விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் அனைவரும் தங்களிடம் உள்ள விதைகளை விதை பரிசோதனைக்கு அனுப்பி அதன் முடிவு களை தெரிந்து கொண்டு பயன்படுத்த வேண் டும். விதைகளின் முளைப்புதிறன் அளவை அறிந்திருந் தால், விதைகளை விதைப்பதற்காக பயன்படுத்துவதா அல்லது விதை இல் லாத இனத்திற்கு பயன்படுத்துவதா என்பது பற்றி நாம் முடிவெடுக்க முடியும். விதைகளின் முளைப்புதிறனுக்கு தகுந்தாற்போல் நாம் விதைகளின் அளவை

அதிகப்படுத்தியும் பயன்படுத்தலாம். அதிக மக சூல் பெறுவதற்கு பயிர் எண்ணிக்கை பராமரிப்பு மிக வும் அவசியமாகும். அதற்கு நல்ல முளைப்புதிறன் உள்ள விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

விதையின் இனத்தூய்மை என்பது விதைகளின் பாரம்பரிய குணங்களை பற்றிய தாகும். இனத்தூய்மை குறைந்த விதையாக இருந்தால் அவற்றை விதை உற்பத்திக் காக பயன்படுத்த முடியாது. மேலும் பிற ரக கலப்பு இருந் தால் விதைகளின் இனத்தூய்மை பாதிக்கப்படும். எனவே விதை பரிசோதனை யின் மூலம் இவற்றை அறிந்து கொண்டு நல்ல தரமான விதைகளையே விதைப்பிற்கு பயன்படுத்தலாம்.

விதைகளின் ஈரப்பதம் என்பது முளைப்புதிறனை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகும். விதைகளின் முளைப்புதிறன் வரையறுக்கப்பட்ட அளவை விட அதிகரித்தாலோ அல்லது குறைந் தாலோ முளைப்புதிறன் பாதிக்கப்படுவதோடு பூச்சி மற்றும் பூஞ்சான நோய்களின் தாக்குதல் அதிகமாகும். எனவே விவசாயி கள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் அனைவரும் தங்களி டம் உள்ள விதைக் குவியல் களை விதைபரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி அதன் பகுப்பாய்வு முடிவு களை தெரிந்து கொண்டு விதைகளை பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு திருச்சி விதை பரிசோதனை நிலைய அலு வலர் எழில்அரசு தெரிவித் துள்ளார்.

## காரைக்குடி ஆவினில் 50 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் பொதுமேலாளர் பேட்டி

காரைக்குடி, : காரைக்குடி ஆவினில் 50 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது என பொதுமேலாளர் கிறிஸ்டோபர் தெரிவித்தார்.

காரைக்குடி ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் சிவகங்கை, ராமநாதபுரம் என இரண்டு மாவட்டங்களை உள்ளடக்கி செயல்படுகிறது. 454 பால் கூட்டுறவு உற்பத்தி சங்கங்களில் இருந்து பால் கொள்முதல் செய்யப்படுகிறது. சிவகங்கையில் 60 சதவீதம், ராமநாதபுரத்தில் இருந்து 40 சதவீதம் பால் வரத்து உள்ளது. 250 ஏஜென்டுகள் மூலம் பொதுமக்களுக்கு பால் விநியோகம் செய்யப்படுகிறது.

சிவகங்கை, பரமக்குடியில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட பால்

குளிர்விப்பான்கள் உள்ளன. மேலும் கூட்டுறவுப்பட்டி, பருத்தி கண்மாய், கட்டிவயல், படமாத்துΣர், வலசப்பட்டி, அலவாக்கோட்டை ஆகிய பகுதிகளில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட குளிர்விப்பான்கள் உள்ளன.

இதுகுறித்து பொதுமேலாளர் கிறிஸ்டோபர் கூறுகையில், 'தமிழக அரசின் இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தினால் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதன்மூலம் பல ஆண்டுகளுக்கு பிறகு 50 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது. பால் உற்பத்தி அதிகரித்தை தொடர்ந்து சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் 10 இடங்களில் ரூ.4 கோடியில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட பால் தொகுப்பு குளிர்விப்பான்கள் அமைக்கப்பட உள்ளது. பால் குளிர்விப்பான்களை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தியை மேலும் உயர்த்தலாம். இரண்டு மாவட்டங்களிலும் சேர்த்து புதிதாக 25 பூத்கள் துவங்கப்பட உள்ளன' என்றார்.

## வீரிய ரக கத்தரி சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

திருக்கோவிலூர், : திருக்கோவிலூர் பகுதியில் விவசாயிகள் தற்போது வீரிய ரக கத்தரி சாகு

படியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நாட்டு காய்கறிகளில் ஒன்றாகவும், மருத்துவ குணம் கொண்டதாகவும் விளங்கி வருவது கத்தரி காய். இவ்வகை கத்தரி செடிகளை முன்பெல்லாம் விவசாயிகள் தங்கள் வீட்டு தோட்டத்தில் மட்டுமே சாகுபடி செய்து வந்தனர். அதுமட்டுமல்லாமல் கரும்பு, வாழை, மணிலா போன்ற பயிர்களில் ஊடு

பயிராகவும் சாகுபடி செய்து வந்தனர். தற்போது கத்தரிக்காயின் விலை அதிகரித்த காரணத்தினால் விளை நிலங்களில் கூட சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். இதில் நாட்டு கத்தரி, வீரிய ரக கத்திரி என்ற இரண்டு வகை உள்ளது. நாட்டு கத்தரிக்காய் சுவை யும் குணமும் உள்ளதால் விவசாயிகள் சாகுபடி செய்து வந்த நிலையில் போதிய வருவாய் இல்லாத காரணத்தினாலும், பூச்சி தாக்குதல் காரணமாகவும் நாட்டு கத்தரி சாகுபடி செய்வதை குறைத்துள்ளனர்.

தற்போது அறிமுகப்

படுத்தப்பட்டுள்ள வீரிய ரக கத்தரியை திருக்கோவிலூர் அருகே உள்ள அரும்பாக்கம், எரவலம், பரடாப்பட்டு, வடியாங்குப்பம், காட்டுப்பையூர், செட்டித்தாங்கல், கொடுக்கப்பட்டு ஆகிய பகுதிகளில் விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடி செய்துள்ளனர். வளமான செம்மண், மற்றும் கரிசல் மண்ணில் அதிகளவில் விளையும் கத்தரி தற்போது சில்லரை வணிகத்தில் கிலோ 1க்கு 25வரை விற்பனையாகிறது. இதில் 1ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் கத்தரி பயிருக்கு ஆகும் செலவு 35ஆயிரம் வரை ஆகிறது. நடவு செய்த 30ம் நாள் முதல் காய்க்கத்  தொடங்கி வாரம் இரண்டு முறை அறுவடை செய்யும் அளவிற்கு காய்க்கிறது. காய்க்க தொடங்கி 8மாதங்கள் வரை விவசாயிகளுக்கு அதிகளவில் மகசூல் தந்து போதிய வருவாயை ஈட்டுகிறது. அதன்பின் படிப்படியாக பராமரிப்பிற்கேற்றவாறு மகசூல் கிடைக்கிறது.

குறைந்த தண்ணீர் செலவும், குறைந்த பராமரிப்பு செலவும் கொண்ட கத்தரியில் ஏக்கருக்கு ரூ.1லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் ஒரு அறுவடைக்கு சுமார் 300கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் கத்தரிக்காய் விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது மட்டுமல்லாமல் திருச்சி, அரியலூர், திருவண்ணாமலை, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் இப்பகுதி விவசாயிகள் ஆர்வமுடன் கத்தரி சாகுபடி செய்து வருகின்றனர்.

## ஜெயங்கொண்டம் பகுதி முந்திரி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் காங்கிரஸ் வலியுறுத்தல்

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் பகுதி முந்திரி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என வட்டார காங்கிரஸ் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. ஜெயங்கொண்டத்தில் வட்டார காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டார தலைவர் செங்குட்டுவன் தலைமை வகித்தார். முன்னாள் எம்எல்ஏ மாசிலாமணி முன்னிலை வகித்தார். ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி தலைவர் ஜாக்சன் வரவேற்றார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ராஜேந்திரன், காங்கிரஸ் பிரமுகர்கள் சங்கர், முல்லைநாதன், சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி தலைவர் வீரமணி,

ஜெயங்கொண்டம் நகர தலைவர் ஜெகநாதன் புஷ்பராஜ், ராசக்கண்ணு, அறிவழகன், ஜான்பீட்டர், அன்பழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் காங்கிரஸ் கமிட்டியின் துணைத்தலைவராக ராகுல் காந்தியை நியமித்ததற்கு நன்றி தெரிவிப்பது, சிதம்பரம் பாராளுமன்ற தொகுதியில் காங்கிரஸ் தனித்து போட்டியிடுவது, இப்பகுதியில் ஏழை எளிய மாணவர்களுக்கு நிபந்தனையின்றி கல்வி கடன் வழங்க வேண்டும். முன்னாள் மத்திய அமைச்சர் சுக்லா மற்றும் சத்தீஷ்கர் மாநில தலைவர் அவரது மகன் ஆகியோர் மரணத்திற்கு இரங்கல் தெரிவிப்பது. இந்த தாக்குதலில் ஈடுபட்ட மாவோயிஸ்ட்டுகளுக்கு கண்டனம் தெரிவிப்பது, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிடி ஸ்கேன் வசதி செய்துதர வேண்டும். முந்திரி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், விவசாய தொழில் மேம்பட விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஜெயங்கொண்டம் கடைவீதியில் வாகன போக்குவரத்தை சீரமைத்து கூட்ட நெரிசலை சரிசெய்ய வேண்டும். வரும் நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையில் தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் ஜெயங்கொண்டம் பகுதி காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

முடிவில் மாவட்ட பொதுசெயலாளர் சுபாசெல்வம் நன்றி கூறினார்.

## தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மும்முனை மின் விநியோக நேரம் அதிகாரி அறிவிப்பு

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் இன்று (17ம் தேதி) முதல் 23ம் தேதி வரை மும்முனை மின்சாரம் வழங்கப்படும் நேரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தஞ்சை மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளது:

செப்டம்பர் மாதம் வரை தினமும் 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. கிராமப்புற மின்பாதைகள் குரூப்&1, குரூப்&2 மின்பாதை வாரியாக பிரிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மும்முனை மின்கால

அட்டவணை சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்படும்.

அதன்படி குரூப்&1 மின்பாதையில் 17 (இன்று) முதல் 23ம் தேதி வரை தினமும் இரவு 11 முதல் காலை 5 மணி வரையும், பகல் 12 முதல் மாலை 6 மணி வரையும் தஞ்சை கோட்டத்தில் அம்மன்பேட்டை, மணக்கரம்பை, அரசூர், குலமங்கலம், கூடலூர், குருங்ளூர், திட்டை, விளார், கண்டிதம்பட்டு, சூரியம்பட்டி, பாலையப்பட்டி, ஆச்சனூர், பனவெளி, வளப்பக்குடி, ஜம்பதுமேல்நகரம், நாகத்தி, சித்திரக்குடி, திருக்கானூர்பட்டி, தங்கப்பஉடையான்பட்டி, மருங்குளம், ஈச்சங்கோட்டை, மெலட்டூர், அன்னப்பன்பேட்டை, வெண்ணுகுடி ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும்.

அதேபோல் ஒரத்தநாடு கோட்டத்தில் சூரக்கோட்டை, காட்டூர், அலங்குடி, சாலியமங்கலம், திருக்கோயில்பத்து, பூண்டி, கோவிலூர், நெய்வாசல், பனயக்கோட்டை, பொன்னாப்பூர், கண்ணந்தங்குடி, கருக்காடிப்பட்டி, ஆதனக்கோட்டை, ஆழிவாய்க்கால், ஒக்கநாடுகீழையூர், பின்னையூர், ஆம்பலாப்பட்டு, வடசேரி புநகர், முள்ளூர்பட்டிகாடு, கண்ணுகுடி, அக்கரைவட்டம், பாதரங்கோட்டை, திருமங்கலக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும்.

கும்பகோணம் கோட்டத்தில் வழத்தூர், சத்தியமங்கலம், முருகங்குடி, நல்லூர் ஆகிய பகுதிகளிலும், கும்பகோணம் வடக்கு கோட்டத்தில் ஆடுதுறை புறநகர், பந்தநல்லூர், மகாராஜபுரம், மானம்பாடி, வேப்பத்தூர், பாலகுடி, புளியஞ்சேரி, உடையாலூர், நாச்சியார்கோவில் ஆகிய பகுதிகளிலும், பட்டுக்கோட்டை கோட்டத்தில் ஆலத்தூர், நம்பிவயல், அத்திவட்டி, கன்னியாக்குறிச்சி, பழஞ்சூர், காசாங்காடு, செருவாவிடுதி, பெருமகளூர், நாடியம், சேதுபாவாசத்திரம், காலகம், பைங்கால், புனல்வாசல், கள்ளம்பட்டி, இடயாத்தி, கருங்குளம், ராஜாமடம், கரம்பை மற்றும் அவற்றை சுற்றியுள்ள பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும்.

குரூப்&2 மின்பாதையில் நள்ளிரவு 12 முதல் பகல் 12 மணி வரை மும்முனை மின்சாரம் வழங்கப்படும். தஞ்சை கோட்டத்தில் அற்புதாபுரம், நாகப்ப உடையான்பட்டி, விளாங்குடி, நடுக்காவேரி, திருமலைசமுத்திரம், ராவுசாப்பட்டி, ஏழுப்பட்டி, கள்ளப்பெரம்பூர், ஆச்சாம்பட்டி, இந்த ளூர், வரகூர், சாமிபட்டி. ஒரத்தநாடு கோட்டத்தில் வடக்கூர், செண்பகபுரம், புலன்காடு, பூவத்தூர், தெற்கு கோட்டை, தெக்கூர்,

தளிக்கோட்டை, கம்பர்நத்தம், பேரையூர், கிருஷ்ணாபுரம், ஊரணிபுரம், உஞ்சியவிடுதி, சோழகன்கரை, பரவாக்கோட்டை, கருவாக்குறிச்சி, வாண்டையார்இருப்பு ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும்.

கும்பகோணம் கோட்டத்தில் வீரசிங்கம்பேட்டை, கபிஸ்தலம், திருக்கருக்காவூர், கும்பகோணம் வடக்கு கோட்டத்தில் சோழபுரம், சிக்கல்நாயக்கன்பேட்டை, திருவாடுதுறை, நீலத்தநல்லூர், சுவாமிமலை, பட்டீஸ்வரம், அண்டக்குடி, கதிராமங்கலம், திருப்பனந்தாள், அரியதிடல், திருநாகேஸ்வரம். பட்டுக்கோட்டை கோட்டத்தில் குறிச்சி, பள்ளத்தூர், அணைக்காடு, பெரியக்கோட்டை, மூத்தாகுறிச்சி, தாமரங்கோட்டை மேலக் காடு, பூக்கொல்லை, ஆவ ணம், உடையநாடு, திருச்சிற்றம்பலம், ரெட்டவயல், ஓட்டங்காடு, வாட்டாத்திகொள்ளைகாடு, செருபாலகாடு உள்ளிட்ட பகுதிகளுக்குமஂ மின்சாரம் வழங்கப்படும்.

## வறட்சியால் பாதித்த தொழிலாளர் குடும்பத்திற்கு ரூ 10 ஆயிரம் நிவாரணம் மாநாட்டில் தீர்மானம்

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் அடுத்த ரெட்டவயலில் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சண்முகம் தலைமை வகித்தார். கந்தசாமி வரவேற் றார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் வேலுச்சாமி, ஒன்றியக்குழு கவுன்சிலர் குத்புதீன், விவசாய சங்க பொறுப்பாளர் வக்கீல் கருப்பையா, வாசு உள்ளிட் டோர் கலந்துகொண்டனர்.

மேலும் 11 பேர் கொண்ட சேதுபாவாசத்திரம் ஒன்றிய குழு விற்கு சண்முகம் தலைவராகவும், பன்னீர்செல்வம், மாசிலாமணி ஆகியோர் துணைத்தலைவராகவும், கந்தசாமி செயலாளராகவும், இளங்கோ துணை செயலாளராகவும், முருகையன் பொருளாளராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

100 நாள் வேலை திட்டத்தில் அரசு அறிவித்துள்ள ரூ.148 கூலியை குறைக்காமல் வழங்கவேண்டும். மேலும் கூலியை ரூ.250ஆக உயர்த்தவேண்டும். வேலை நாட்களை 150ல் இருந்து 200 நாட்களாக உயர்த்த வேண்டும். வேலை அளவை 30 கனஅடியாக குறைக்கவேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட தொழிலாளியின் குடும்பத்திற்கும் ரூ.10

ஆயிரம் நிவாரணம் வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பருவமழை சீசன் துவக்கம் நெல் நடவுக்கு வயலை தயார்படுத்துவது எப்படி வேளாண்.துறையினர் யோசனை

ராமநாதபுரம், : தென்மேற்கு பருவமழை சீசன் துவங்கியுள்ளதால் மாவட்டத்தில் நெல் நடவுக்கு வயலை தயார்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை யோசனை தெரிவித்துள்ளது.இதுகுறித்து வேளாண்மைத்துறையினர் கூறியதாவது:

நெல் நாற்றுகளை நடவு செய்வதற்கு முன்பாக, நடவுக்கு ஏற்றாற்போல் வயலை தயார்படுத்த வேண்டும். வயலை உழுது ஹெக்டேருக்கு 12.5 டன் தொழு உரம் அல்லது 6.25 மெட்ரிக் டன் பசுந்தழை உரம் இடவேண்டும். தொடர்ந்து மண் ஆய்வில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அடி உரமான மணிச்சத்தையும், சாம்பல் சத்தில் பாதியையும் பசுந்தாள் உரத்துடன் சேர்த்து இடவேண்டும். அதன்பிறகு உழுது பரம்பு பலகை கொண்டு, வயலை நன்கு சமப்படுத்த வேண்டும். பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தினை அடி உரமாக இடாமல் நெல் பயிரை நட்டு, பச்சை திரும்பியவுடன் இடவேண்டும். சுண்ணாம்பு சத்து இல்லாத களிமண் பாங் கான நிலங்களில் அடியுரமாக ஹெக்டேருக்கு 500 கிலோ ஜிப்சம் இடவேண்டும். அமிலத்தன்மை கொண்ட நிலங்களில் ஹெக்டேருக்கு 2.5 மெட்ரிக் டன் நீர்த்த சுண்ணாம்பை கடைசி உழவில் இடவேண்டும். ஹெக்டேருக்கு 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம், 10 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றை நன்கு மக்கிய 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து நடவிற்கு முன் சீராக தூவ வேண்டும். துத்தநாக பற்றாக்குறை இருக்கும்பட்சத்தில் ஹெக்டேருக்கு 25 கிலோ சிங் சல்பேட்டினை 75 கிலோ மணலுடன் கலந்து நடவிற்கு முன் சீராக தூவவேண்டும். வயல் வரப்புகளின் ஓரங்களை மட்டும் அண்டை எடுத்து சுத்தம் செய்தல் மற்றும் மூலைகளை கொத்தி விடவேண்டும். வரப்புகளை எக்காரணம் கொண்டும் சேறு மூலம் மொழுகக் கூடாது. அவ்வாறு செய்தால் வரப்புகளில் உள்ள புல் பூண்டுகளில் சிலந்தி, பாச்சை மற் றும் இடுக்கி பூச்சி போன்ற தங்கி இனப்பெருக்கம் செய்ய வாய்ப்புள்ளது.

நூற்புழு தாக்குதல் உள்ள இடங்களில் நாற்றுகளின் வேர்களை 1 சத சாமந்தி வேர்

சாற்றில் நனைத்து நட வேண்டும். நாற்றுகளை நட்ட 10வது நாள் ஹெக்டேருக்கு 10 கிலோ நன்கு தூளாக்கிய நீலப்பச்சை பாசியை போதிய மணலுடன் கலந்து சீராக தூவவேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## காய்கறி விலை உயர்வால் கடலூர் மக்கள் பாதிப்பு

கடலூர், : கடலூரில் இஞ்சி, தக்காளி, சின்னவெங்காயம், பீன்ஸ் உள்ளிட்ட காய் கறிகளின் விலை அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடலூர் மஞ்சக்குப்பம், திருப்பாதிரிப்புலியூர், முதுநகர் ஆகிய இடங்களில் மிகப்பெரிய காய்கறி கடைகள் உள்ளன. அது தவிர குடியிருப்பு பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட காய்கறி கடைகளும் இயங்கி வருகின்றன. பெங்களூர், ஓசூர், கோவை, திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் இருந்து கடலூருக்கு காய்கறிகள் லாரிகளில் நாள்தோறும் கொண்டு வரப்படுகின்றன. சில வாரங்களுக்கு தக்காளிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அதன் விலை 68 ரூபாய்க்கு உயர்ந்தது. தற்போது சற்று விலை குறைந்து ரூ 36க்கு விற்கப்படுகிறது. இஞ்சி விலை வரலாறு காணாத அளவில் கிலோ ரூ. 200க்கு விற்கப் படுகிறது. அது போல் சின்னவெங்காயம் ரூ. 100க்கும், பீன்ஸ் 80க்கும், கேரட்
ரூ. 42 என அனைத்து காய்கறிகளும் விலை உயர்ந்துள்ளன. இதனால் நடுத்தர வர்க்கத்தினர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து கடலூர் மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட்டில் காய்கறி கடைக்காரர்கள் கூறியதாவது: இந்த ஆண்டு காய்கறி சீசன் தற்போது தான் தொடங்க உள்ளது. ஆனால் வறட்சி மற்றும் தட்பவெப்பநிலை மாற்றம் காரணமாக விளைச்சல் குறைந்து காய்கறிகளின் விலை அதிகமாகியுள்ளது. காய்கறி விலையேற்றத்தினால் மக்களின் பார்வை நாட்டு காய்களின் மீது திரும்பியுள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் காய்கறி விலைகள் குறையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

மஞ்சூர், மஞ்சூர் அருகே உள்ள பிக்கட்டி பேரூராட்சியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடைப்பெற் றது. பேரணிக்கு பேரூராட்சி தலைவர் ஜெய மணி

தலைமை தாங்கினார். துணை தலைவர் விஸ்வநாதன், முன்னிலை வகித்தார். பேரூராட்சி செயல் அலுவ லர் நடராஜ் கொடியசைத்து பேரணியை துவக்கி வைத்தார். இதில் பிக்கட்டி அரசு உயர்நிலை பள்ளியை சேர்ந்த மாணவ, மாணவி கள், ஆசிரியர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள், அலுவலர்கள், துப்புரவு, குடிநீர் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். பேரணி பேரூராட்சி அலுவலக வளாகத்தில் துவங்கி பிக்கட்டி பஜார் வழியாக முள்ளிகூர் ஆடா வரை சென்றது. இதில் மழைநீர் சேகரிப்பின் அவ சியம் குறித்து கோஷங்கள் எழுப்பியும், துண்டு பிரசுரங்களை வினியோகித்தும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றார்கள். முடிவில் பேரூராட்சி இளநிலை உதவியாளர் மார்கண்டேயன் நன்றி கூறினார்.

## விருத்தாசலத்தில் இயற்கைமுறை விவசாயத்தில் பாகற்காய் பயிர் செய்ய பந்தல் அமைப்பு

விருத்தாசலம்,

விருத்தாசலத்தில் இயற்கையான முறையில் பாகற்காய் பயிர் செய்து வருவாய் ஈட்ட விவசாயிகள் பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

குறுகிய கால பயிர்

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் பகுதியில் கடந்த ஆண்டு போதிய அளவிற்கு பருவமழை பெய்யவில்லை. இதனால், நீர் ஆதரமான மணிமுக்தா ஆற்றிலும் தண்ணீர் பெருக்கெடுக்காததன் காரணமாக நெல், மற்றும் கரும்பு பயிர் செய்து வந்த விவசாயிகள் அனைவரும் தண்ணீர் பற்றாக்குறைக்கு உள்ளானார்கள். இதே நிலை தற்போதும் நீடிப்பதால், நீண்ட நாள் பயிர்களை விட்டுவிட்டு, குறுகிய காலத்தில் வருவாய் தரக்கூடிய பயிர்களை பயிர்செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட தொடங்கி உள்ளார்கள்.

பந்தல் அமைப்பு

அந்தவகையில் தோட்டக்கலை பயிர்களான காய்கறிகள், மற்றும் தானியங்களை அதிகளவில் விருத்தாசலம் பகுதி விவசாயிகள் பயிர்செய்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது பந்தல் அமைத்து பாகற்காய் பயிர்செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த முறையில் சவுக்கு கம்புகள், மற்றும் கம்பி, போன்றவற்றை வாங்கி முதலில் பந்தல் அமைக்கின்றனர். பின், பாகற்காய் கொடியினை இதற்கென வயலில் அமைக்கப்பட்டுள்ள

பந்தலில் படரவிடுகின்றனர்.அவை நன்கு செழித்து கொடியாக படர்ந்து, காய்த்து குலுங்கும் போது அவற்றை அறுவடை செய்வது எளிது என்கிறார்கள் விவசாயிகள்.

ஒரு ஆண்டிற்கு மேலும்...

இதுகுறித்து பாகற்காய் பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயி விஸ்வநாதன் என்பவர் கூறுகையில், நான் அம்மன் ரக பாகற்காயை பயிரிட்டுள்ளேன். சாதாரணமாக இவை மண்ணில் படர்வதை காட்டிலும்,கொடியில் படர்ந்தால் அதிகளவில் காய்ப்பும், அவற்றை அறுவடை செய்யும் பணியும் எளிதாக இருக்கும். மேலும் ஒருமுறை இந்த பந்தலை அமைத்தால் ஒருவருடத்திற்கும் மேலாக தாக்குப்பிடிக்கும். அதுமட்டுமின்றி பாகற்காய் அறுவடை காலம் முடிந்த பின்னர், இதே பந்தலில் புடலங்காய் செடியையும் படரவைத்து அறுவடை செய்து லாபம் ஈட்டலாம். மேலும் முற்றிலும் இயற்கையான முறையில் பாகற்காய் சாகுபடி செய்ய போவதாகவும், தற்போது 30 சென்ட் நிலத்தில் இதற்கான பந்தலை அமைக்க ரூ. 7 ஆயிரம் வரையில் செலவானதாக அவர் தெரிவித்தார்.

## வரத்து அதிகரிப்பால் திண்டிவனத்தில் மாம்பழம் விலை குறைந்தது

திண்டிவனம்,

திண்டிவனத்தில் வரத்து அதிகரிப்பால் மாம்பழங்களின் விலை குறைந்துள்ளதால் பொது மக்கள் அதனை வாங்க அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகின்ற னர்.

மாம்பழத்து வரத்து அதிகரிப்பு

முக்கனிகளில் முதன்மை யானது மாம்பழம். மற்ற பழங்களை விட மாம்பழத் திற்கு அதிக சுவை உள்ளதால் சிறுவர்கள் முதல் பெரிய வர்கள் வரை அனைவரும் அதனை விரும்பி சாப்பிட்டு வரு கின்றனர். தமிழகம் முழுவதும் மாம்பழ சீசன் தொடங்கியுள்ளதால் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் வியாபாரிகள் அதிக அளவில் மாம்பழங்களை இறக்குமதி செய்து பழங்களை விற்று வருகின்றனர். இது குறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது.

விலை குறைந்துள்ளது

கடந்த மாதமே மாம்பழ சீசன் தொடங்கினாலும் தற் போதுதான் அதன் விளைச் சல் தீவிரமடைந்துள்ளது. இத னால் மாம்பழங்களின் வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதன் காரணமாக மாம்பழத்தின் விலையும் கணிசமாக குறைந்துள்ளது. கடந்த மாதம் ரூ.30 முதல் ரூ. 40 வரைக்கு விற்ற மாம்பழங்கள் இன்று ரூ.15ல் இருந்து ரூ. 20 வரைக்கு விற்கப்படுகின்றன. விலை குறைந்துள்ளதால் பொது மக்கள் அதிக ஆர்வத்துடன் வந்து மாம்பழங்களை வாங்கி செல்கின்றனர்.

விளைச்சல் அதிகம்

இதனால் மாம்பழ வியாபாரம் அமோகமாக நடைபெற்று வருகின்றன. கிருஷ்ணகிரி, சேலம் உள்ளிட்ட பகுதிகளில் நடப் பாண்டில் மாம்பழ விளைச் சல் அதிகமாக உள்ளதால் அங்கிருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்து வரு கின்றோம். இவ்வாறு அவர் கூறி னார்.